
கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

18-1-1976

60 காசு




வாழ்க்கையில் அதிர்ஷ்டமுள்ள ஆடவர் ஒருவரை மீண்டும் சந்திக்கும்போது...
...அவர் அணிந்துள்ள ஆடைகளின் அழகையும் பாருங்கள்!





சூரியன்

உலகுக் கெல்லாம் ஒருவிளக்கு — இறைவன்
உணர்ந்து ஏற்றிய திருவிளக்கு!
கலக்கும் புயலில் அணையாது! — ஒரு
கடுமழை நீரிலும் நனையாது !

என்றோ ஒருநாள் இறைவனவன் — இதை
எட்டாத் தொலைவில் ஏற்றிவைத்தான்!
எண்ணெயும் திரியும் இல்லாமல் — இது
எத்தனை யுகங்களாய் எரியுதம்மா!

வையம் வாழ எரியுதம்மா! — ஒளி
வைரக் கடுமழை பொழியுதம்மா!
மாயச் சூரிய விளக்கிதனை — புகழ்
மாலை சூட்டி வணங்கிடுவோம்!

—காரை மணி

பொங்கல் திருநாள்

பொங்கல் திருநாள் பிறந்தாச்சு
புதிய பானையும் வந்தாச்சு!
மங்கலக் கோலம் போட்டாச்சு!
மஞ்சள் கரும்பும் சேர்த்தாச்சு!

வீடு சுத்தம் செய்தாச்சு!
விளக்கிப் பாத்திரம் வைத்தாச்சு!
மாடு கன்றைக் குளிப்பாட்டி
மாலை மணிகள் போட்டாச்சு!

அம்மா அப்பா அண்ணனுடன்
அக்கா தம்பி தங்கைகளும்
செம்மை யான துணிமணிகள்
சேர்ந்தே கட்டி மகிழ்ந்தாச்சு !

பூசை செய்து மலர் தூவி
புதுநெல் அரிசிப் பொங்கலிட்டு
ஆசை யாகச் சங்கொலித்தே
அழகாய்ப் படையல் வைத்தாச்சு!

குத்து விளக்கை ஏற்றிவைத்துக்
கும்பிட் டாச்சு சாமியெலாம்
கத்தும் காக்கைக் கன்பாகக்
கனிந்து சோறும் வைத்தாச்சு!

சர்க்கரைப் பொங்கல் வெண்பொங்கல்
சாமிக் கெல்லாம் படைத்தாச்சு!
வர்க்கக் கனிகள் நெய்யூற்றி
வாழை இலையில் இட்டாச்சு!

இன்பப் பொங்கல் உண்பதற்கே
இனிதாய் அனைவரும் வந்திடுவீர்!
அன்புப் பொங்கல் பொங்கிடுக!
அன்பீர்! பொங்கல் நல்வாழ்த்து!

உலகம் வாழ உழுதுழுது
உயிருடல் தேயும் உழவர்களைத்
திலகம் என்றே உலகறியச்
செய்யும் பொங்கல் பொங்குகவே!

— தமிழ்முடி



கோகுலம்

மலர் 4 * இதழ் 21

ஜனவரி 18, 1976

ராட்சஸ, தை. 4





சந்தா விகிதம்
இந்தியா


ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50

வெளிநாடுகள்

ஒரு வருடம்	ரூ. 33.00
ஆறு மாதம்	ரூ. 16.50

அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்



திருநீற்றின் பெருமை

நீலகண்டன் என்பவன் நெய்யும் தொழில் செய்பவன்; செய்யும் தொழில்களில் நெய்யும் தொழில் சிறந்தது. மனம் உள்ளவனுக்கு மானம் இருக்க வேண்டும். மானத்தைக் காப்பது துணி. அதனால் இத்தொழில் உயர்ந்தது.

நீலகண்டன் ஓய்வு ஒழிச்சல் இன்றிக் கண்ணும் கருத்துமாக நெசவு நெய்வான். அவனுடைய துணி அழுத்தமாகவும் வளமையாகவும் இருப்பதனால் மக்கள் பிரியமாக வாங்கிக் கொள்ளுவார்கள்.

துணி நெய்வதனால் வருவாய் குறைவாகத்தான் வரும். வறுமையாகிய சிறுமையில் வாடினான். அவன் மனைவி கலாவதி நல்ல சிவபக்தி பூண்டவள். திறமையும் ஒழுக்கமும் உடையவள். பூசை, கோயில் வழிபாடு, ஜபம் முதலிய நித்திய கருமங்களில் வழுவாது நிற்பவள்.

நீலகண்டனுக்கு இவைகள் செய்ய நேரம் கிடையாது. விடியும் முன்னரே தறியில் அமர்ந்து நெய்யத் தொடங்குவான். தறியில் இருந்தபடியே மனைவி தரும் கேழ்வரகு கூழைக் குடிப்பான். மாலை நேரம் வந்ததும் தறியைவிட்டு இறங்கி உண்டு களைத்து உறங்கி விடுவான்.

அந்த ஊரில் குருநாதர் வந்து எல்லாருக்கும் சிவதீட்சை தந்தார். நீலகண்டன் அதில் ஈடுபடவில்லை. அவனுக்குத் தறியே குறி. வேறு நெறியில்லை.

கணவனிடம் அனுமதி பெற்றுக் கலாவதி தீட்சை பெற்றுக் கொண்டாள். அவள் காலை மாலை அநுஷ்டானம் செய்வாள்.

கலாவதி கணவனைப் பார்த்து ''சதா நெய்து கொண்டே யிருக்கின்றீரே! ஆத்ம லாபம் தேட வேண்டாமா? நீரும் தீட்சை பெற்று காலை மாலை பத்து நிமிஷம் பஞ்சாட்சர ஜெபம் செய்யுங்கள். உடம்பை வளர்ப்பதோடு உயிரையும் வளர்க்க வேண்டும். உயிருக்கு உறுதி செய்வது ஐந்தெழுத்து'' என்று இதம் பதமாகச் சொன்னாள்.

நீலகண்டன், ''கலா! நீ ஜெபம் செய். நான் வேண்டாம் என்று தடுக்கமாட்டேன். நான் நெசவாளி. எட்டிப் பார்த்தால் எட்டு இழை குறையும். எனக்கு அநுஷ்டானம் செய்ய நேரம் கிடையாது'' என்று கண்டித்துச் சொல்லிவிட்டான்.

தற்செயலாக குருநாதரே அச்சமயம் அங்கு எழுந்தருளினார். கலாவதி அவரை வணங்கினாள். நீலகண்டன் தறியில் இருந்தபடியே கும்

பிட்டான். கலாவதியிட்ட ஆசனத்தில் அவர் அமர்ந்தார்.

குருநாதர், ''அப்பனே! நீ தீட்சை பெற்றுச் சில நிமிஷம் வழிபாடு செய்ய லாமே ?'' என்றார்.

'' சுவாமீ ! மன்னிக்க வேண்டும். என்ன செய்வேன் ? நான் ஏழை நெச வாளி. பஞ்சு படாத பாடு பட்டுக் கஞ்சி குடிக்கின்றேன். எனக்கு நேரம் கிடையாது. உங்கள் ஆசிர்வாதம் இருந் தால் அதுவே போதும். ஏழை ஈடேறு வேன்'' என்றான் நீலகண்டன்.

''நல்லது. உனக்குச் சிவபெருமான் கருணை புரிவார். திருநீறு பூசிக்கொண்டு ஒரு நிமிஷம் சிவமூர்த்தியைத் தியானம் செய்யலாமே ?''

'' சுவாமீ ! அந்த ஒரு நிமிஷத்தில் ஒரு விறற்கடை நெய்வேன். நெய்தால் வயிறு நிரம்பும்.''

''அப்படியா ? ஒன்று செய். திருநீறு தரித்த திருமுகத்தைத் தரிசித்துவிட்டுப் பின்னராவது கஞ்சி குடி. இந்த ஒரு நியமத்தையாவது கடைப் பிடித்து ஒழுகு. உனக்கு நலம் விளையும்.''

'' அப்படியே செய்கின்றேன்.''

'' வாழ்க !''

குருநாதர் போய்விட்டார்.

பக்கத்து வீட்டில் பரமசிவம் என்ற குயவனார் வாழ்ந்து வந்தார். அவர் சிவ பூசை செய்பவர். எப்போதும் நெற்றி நிறைய நீறணிந்திருப்பார். அடிக்கடி ஜன்னல்வழி நீலகண்டனிடம் பொடிக்கு வருவார். அவரைப் பார்த்துவிட்டு நீல கண்டன் தறியில் இருந்தபடியே கூழைக் குடிப்பான்.

இவ்வாறு சில தினங்கள் கழிந்தன. ஒரு நாள் பரமசிவத்துக்கு மூன்று காசு கிடைக்கப் பொடி வாங்கிவிட்டார். அதனால் பொடி கேட்க வரவில்லை. நீல கண்டனுக்குக் கடும் பசி. திருநீற்று முகத்தைப் பார்த்த பிறகுதானே சாப் பாடு. இந்த நியதியில் உறுதியுடன் இருந் தான். ''பாழாய்ப் போன பரமசிவத் தைக் காணோமே?வயிறு பசிக்கின்றதே!'' என்று மனம் நொந்தான். வேறு வழி யில்லை. தறியைவிட்டு இறங்கினான்.

அடுத்த வீட்டுக்கு ஓடினான். அந்த நேரம் களி மண் கொணரப் பரமசிவம் ஊருக்கு அருகில் உள்ள வயலுக்குச் சென்றிருந்தார். நீலகண்டனுக்கு மேலும் ஏமாற்றம். வயலுக்கு ஓடினான்.

பரமசிவம் வயல் பக்கம் மண் எடுக்கக் குழியில் மண்ணைத் தோண்டி னார். அதில் பவுன்கள் நிறைந்த இரு செப்புக் குடங்கள் இருந்தன. யாரா வது பார்த்துவிட்டார்களோ என்று நிமிர்ந்து பார்த்தார். அதே சமயம் நீலகண்டன் அங்கு ஓடி வந்து ''பார்த்து விட்டேன்.....!'' என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

அவன் புதையலைப் பார்க்கவில்லை. திரு நீற்றிட்ட முகத்தை மட்டுமே பார்த் தான். பிறகு அவசரம் அவசரமாக ஓடித் தறியில் அமர்ந்து கூழ் குடித்தான்.

புதையலை எடுத்து மறைத்து விட்டு வீட்டுக்கு வந்த பரமசிவம் இரகசியமாக கலாவதியை அழைத்து, ''அம்மா !.... இரு புதையல்கள் கிடைத்தன. உன் கண வனார் பார்த்துவிட்டு வந்தார். வெளியே சொன்னால் அரசாங்கம் அபகரித்துக் கொள்ளும். ஒன்று உனக்கு மற்றொன்று எனக்கு. இது நமக்குள்ளே இருக்கட்டும்'' என்று ஒரு செப்புக்குடத்தைத் தந்தான்.

கலாவதி கணவனைப் பார்த்து, ''நீர் பரமசிவத்தைப் பார்க்கச் சென்றீரே? என்ன பார்த்தீர்?'' என்று கேட்டாள்.

'' என்ன பார்த்தேன் ? உன் தலை. விபூதி பூசிய முகத்தைத்தான் கண்டு விட்டு வந்தேன்'' என்றான்.

கலாவதி நடந்ததைக் கூறிப் புதைய லைக் காட்டினாள். நீலகண்டன் ஆச்சரியம் அடைந்தான். ''நியதியாகத் திருநீறு பூசியதைப் பார்த்ததற்கே இப்பயனா? இனி நானே திருநீறு பூசி ஈடேறுவேன்'' என்று எண்ணி, தீட்சை பெற்றுச் சிவ பூசை செய்து, செல்வச் சிறப்புடன் வாழ்ந்தான்.





எஸ். சியாமளா

ஹால் கடிகாரம் டங்...டங்.... என்று ஐந்து முறை அடித்த போது வனிதா சட்டென்று துள்ளி எழுந்தாள். அதே சமயம் சிவப்புக் காயைக் குறி பார்த்து அடிக்கத் தயாராகிக் கொண்டிருந்த சங்கரும் திடுக்கென்று நிமிர்ந்து கடிகாரத்தைப் பார்த்துவிட்டு ''மணி ஐந்து ஆகிவிட்டதே, வனிதா! சுதாகரோட ஸ்கூல் 'ஷோ' நாலு மணிக்கே முடிந்திருக்குமே!'' என்றான்.

''ஆமாம்டா...சங்கர்! கேரம் ஆடுகிற சுவாரசியத்திலே நேரமே தெரியலே.... அம்மா...கோபித்துக் கொள்ளுவாளே'' என்று கலவரத்துடன் சொன்னாள்.

''எதற்குப் பயப்படணும் வனிதா? சுதாகர் தானே வரமாட்டானா என்ன....?'' அவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த ரமா கேட்டாள்.

''சங்கர்! நாங்கள் வந்த நாலு நாட்களாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஏன் இப்படிச் சுதாகரை ஸ்கூலுக்குக் கொண்டுவிட்டு, அழைத்து வந்து எல்லாம் செய்கிறீர்கள். அவனுக்குப் பத்து வயதிருக்குமே? நாலாவது படிக்கிறான். தானே போய் வரமாட்டானா, என்ன?'' என்று வினவினான் ரகு.

''அண்ணா! வனிதாதான் குளிப்பாட்டிவிடறாள். ட்ரெஸ் பண்ணிவிடறாள். சுதாகர் உட்கார்ந்த இடத்திலிருந்தே 'அதைக் கொண்டு வா..... இதைக் கொண்டு வா' என்று அதிகாரம் செய்கிறான். இவா ரெண்டு பேரும் நடுங்குகிறார்களே, கவனித்தாயா......?''

''எல்லாம் பார்த்தேனே.... ஏன் வனிதா, அவனுக்குக் கால் கொஞ்சம் ஊனம்தான். ஆனாலும் நடக்கத்தான் முடிகிறதே, அவனுக்கு நீங்கள் ஏன் எல்லாம் செய்யணும்...... ?''

மாறி மாறி அண்ணனும் தங்கையும் தவித்து விழித்தார்கள். ரமாவும் ரகுவும் ஒரு விசேஷத்துக்காகப் பத்து நாள் லீவில் மாமாவின் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். மாமாவின் பெண் வனிதா தன் தம்பிக்கு எல்லாம் செய்வதைக் கவனித்து ஆச்சரியப்பட்டனர்.

சுதாகரை ஸ்கூலுக்குக் கொண்டு விடுவான் சங்கர். அழைத்தும் வருவான். தம்பியின் புத்தகப் பெட்டியைக்கூட அவனேதான் எடுத்துக் கொண்டு வருவான்.

''இல்லேடா, ரகு! அம்மா திட்டுவாள். சுதாகர் வருத்தப்படுவானாம். அவன் என்ன சொன்னாலும் உடனே செய்ய வேண்டுமாம். என்ன கேட்டாலும் உடனே கொடுக்க வேண்டுமாம்.....'' வனிதா கூறினாள். அவள் குரலில் சிறிது எரிச்சலும் தெரிந்தது.

''ஆமாம்..... சில சமயம் நாங்கள் காதில் விழாமல், கவனிக்காமல் இருந்து விட்டால் சுதாகர் பெரிதாகக் கத்துவான். அவனை அலட்சியம் செய்வதாக அம்மாவிடம் சொல்லிக் கூப்பாடு போடுவான். குளிக்காமல், சாப்பிடாமல் பிடிவாதம் பிடிப்பான்....'' என்றான் சங்கர்.

''எல்லாம் நீங்கள் செய்து செய்து பழக்கம் பண்ணிவிட்டீர்கள். ருசி கண்ட பூனை மாதிரி அவன் உங்களை ஆட்டி வைக்கிறான்.''

''வனிதா! சுதாகருக்குக் காலில் ஊனமாக இருக்கிறது எல்லாருக்கும் வருத்தமாகத்தான் இருக்கும். அதற்காகச் செல்லம் கொடுத்து அவனைக் கெடுத்துவிட்டீர்களே'' என்றாள் ரமா.

''நாங்கள் என்ன செய்வது ரமா! இந்த அம்மாதான், தப்பித் தவறி என்றைக்காவது சுதாகரைக் கவனிக்காவிட்டால் எங்களை அவன் எதிரிலேயே திட்டுவாள். 'தம்பி என்று அன்பும் அனுதாபமும் இல்லை' என்பாள். இன்றைக்குப் பாரேன். நாலு மணிக்கு 'ஷோ' முடிந்துவிட்டிருக்கும். இப்போது மணி ஐந்தாகி விட்டது.

பள்ளிக்கூடத்து வாசற்படியிலேயே அடமாக உட்கார்ந்திருப்பான். நாங்கள் போய்க் கூப்பிட்டால் அழுது முணுமுணுப்பான். வீட்டுக்கு வந்ததும் ஒரே அமர்க்களம் பண்ணுவான். பாருங்களேன்.....'' என்ற வனிதா கேரம் போர்டைத் தூக்கிச் சுவரில் சாய்த்து வைத்துவிட்டு, ''ரமா ! நீ வா என்னோடு. வீட்டில் சங்கரும் ரகுவும் காவலாக இருப்பார்கள்.....'' என்று கூறினாள். ரமாவும் வனிதாவோடு கிளம்பினாள். சங்கரும் ரகுவும் வாசலில் சிறிது நேரம் 'ரிங்' விளையாடலாம் என்று பேசிக் கொண்டார்கள்.

பள்ளிக்கூடத்தில் நான்கு மணிக்கு 'பிலிம் ஷோ' முடிந்துவிட்டதும் எல்லா மாணவ மாணவிகளும் கும்பல் கும்பலாகச் சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் செல்ல ஆரம்பித்தனர். பியூன் முருகேசன் 'கேட்'டைப் பூட்டினான்.

'' என்ன சுதாகர் ! உன்னோட அண்ணன் வரலையா.....?'' என்று வினவிய படியே பியூன் நடந்தான். சுதாகர் சில விநாடிகள் அங்கு நின்றான். பிறகு அந்தப் படியிலேயே உட்கார்ந்துகொண்டான். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் எங்கிருந்தோ ரேடியோவில் 'நேயர் விருப்பம்' பாடல்கள் கேட்டன. சுதாகருக்குக் கோபம் தாள முடியவில்லை. 'மணி நாலரைகூட இருக்கும். வனிதா சங்கர் யாருமே வரலை. அம்மா, அப்பா, மாமா, எல்லோரும் ஆவடிக்குப் போயிருக்கிறார்கள். ரகு ரமாவோடு இவர்கள் குஷியாக 'கேரம்' ஆடிக் கொண்டிருப்பார்கள். என்னை மறந்தே விட்டார்கள். இருக்கட்டும், இருக்கட்டும். அவர்களை அழ வைக்கிறேன். எத்தனை நேரமாக நான் இங்கே உட்கார்ந்திருக்கிறேன்....' என்று தனக்குள் கூறிக் கொண்டவன் மெதுவாக எழுந்து சிறிது தூரத்திலிருந்த 'பார்க்'கில் சென்று ஒரு சிமெண்ட் திண்ணையில் அமர்ந்து கொண்டான். அருகில் இருந்த பூச்செடிகளில் புஷ்பங்கள் மலர்ந்து மணம் வீசின.

சில குழந்தைகள் ஊஞ்சலிலும் சறுக்கு மரத்திலும் விளையாடிக் கொண்டிருந்தனர். சுதாகர் வேடிக்கை



பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது ஓர் அம்மாளும் ஒரு பையனும் பரபரப்புடன் அந்தப் பார்க்கில் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தனர்.

''எங்கேயும் காணோமே, அம்மா!'' என்றான் அந்தப் பையன் கவலையுடன்.

சுதாகரை நெருங்கிய அந்த அம்மாள், ''பையா! இங்கே பச்சைப் பட்டுப் பாவாடை கட்டிக் கொண்டு ஒரு பெண் வந்தாளா..... பார்த்தியா?'' என்று வினவினாள்.

''இல்லையே, மாமி. நானும் பத்து நிமிஷமாக இங்கேதான் உட்கார்ந்திருக்கிறேன். அதோ அந்தக் குழந்தைகளைத் தவிர வேறு யாருமே வரவில்லையே?'' என்றான் சுதாகர்.

''சரி, இங்கேயும் காணோம் ஜகதா வீட்டில் போய்ப் பார்க்கலாம். வாம்மா!'' என்ற அந்தப் பையனோடு அந்த அம்மாளும் 'பார்க்'கைவிட்டு வேகமாக வெளியேறினார்கள். அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த சுதாகர், ''நல்ல வேளை....'' என்ற இனிய குரல் அருகில் கேட்கத் திகைத்துத் திரும்பினான். சிமெண்ட் பெஞ்சியில் அவன் அருகில் பச்சைப் பட்டுப் பாவாடை கட்டிய அந்தச் சிறுமி உட்கார்ந்திருந்தாள்! சுதாகருக்குத் தூக்கிவாரிப் போட்டது. அந்தப் பெண் அவனைப் பார்த்து அழகாகச் சிரித்தாள்.

'' நீ... இங்கே ஒளிஞ்சிண்டு இருந்தியா, என்ன.....?'' என வினவினான் சுதாகர்.

''ஆமாம்..... நீ வந்தபோதுதான் நான் இந்த நந்தியாவட்டைச் செடிக்குப் பின்னே ஒளிஞ்சிண்டு இருந்தேன்.....'' சிறுமி கூறினாள்.

''பாவம், உங்க அம்மாவும் அண்ணாவும் எத்தனை கவலையோடு தேடினார்கள். நீ ஏன் ஒளியணும்?'' என்று கேட்டான்.

தன் வயதுதான் அந்தப் பெண்ணுக்கும் இருக்கும் என்று அவன் ஊகித்தான். அவள் ஏதோ தீவிரமாக யோசிப்பது போல ஒரு விநாடி சும்மா இருந்தாள். பிறகு சந்தோஷம் பொங்கச் சிரித்தாள். ''பின்னே, என்ன? எப்பவும் என்னைக் கட்டிக் காத்திண்டிருக்காங்க எல்லாரும். எனக்கு ஃப்ரீயாகக் கொஞ்ச நேரம் விளையாடக் கூட முடியவில்லை.......''

சுதாகருக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் வட்ட முகத்தையும் உப்பிய கன்னங்களையும் ஆடும் ஜிமிக்கியையும், நெற்றியில் பறந்து விழும் சுருண்ட முடியையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''உன் பேர் என்ன....?'' அவள் தான் கேட்டாள்.

''சுதாகர், உன் பேர்?''

''மதுரம் என்று பெயர்....மதூன்னு தான் எல்லாரும் கூப்பிடுவா'' என்றவள் தொடர்ந்து, ''சுதாகர்! நீ பள்ளிக்கூடம் போறியா?'' என்றாள்.

''ஓ... நான் நாலாவது படிக்கிறேன். அதோ அந்த ஸ்கூல்தான்.'' சுட்டிக் காட்டினான். பிறகு, ''நீ.... எந்த ஸ்கூலில் படிக்கிறே?... எத்தனாவது?'' என்று கேட்டான்.

அந்தப் பெண்ணின் கண்களில் நீர் தளும்பியது.

''எனக்கு உடம்பு சரியில்லையாம். ஹார்ட் ரொம்ப வீக் என்று டாக்டர் சொல்லியிருக்கார். அதனாலே வீட்டிலேயே டியூஷன். இரண்டாவது வரை ஸ்கூலில் படிச்சேன். இப்ப இரண்டு வருஷமா வீட்டிலேயேதான். எனக்கு எல்லாப் பசங்களையும் போல ஜாலியாப் பெட்டியைத் தூக்கிண்டு பள்ளிக்கூடம் போக ஆசை. கனமாக எதையும் தூக்கக் கூடாதாம். ஓடி விளையாடக் கூடாதாம்.... டாக்டர் ஏதோ கொஞ்சம் சொன்னா, இந்த அம்மா அப்பா எல்லாரும் என்னை நடக்கக்கூட விடமாட்டேங்கறாங்க. தூக்கிண்டு போவாங்க. எனக்குக் கோபம் தான் வரது. நடந்தால் என்னவாம்.....? ரொம்ப நேரம் உட்காரக் கூட விடறதில்லே. படுத்துக்கச் சொல்லிடுவாங்க. சீ... சீ... எனக்குப் பிடிக்கவே இல்லே.'' குழாயிலிருந்து ஜலம் கொட்டுவது போல மதுரம் கடகடவெனப் பேசினாள். அவள் நெஞ்சின் சுமையை இறக்கி வைத்தாற் போல் பெருமூச்சுவிட்டாள். சுதாகர் வியப்புடன் விழிகள் விரியப் பார்த்தான்.

''பாவம், சுதாகர்! நீ வரும்போது பார்த்தேனே. உனக்குச் சரியாக நடக்க முடியவில்லை..... இல்லையா? அதற்காக நீ வீட்டிலேயே இருக்க முடியுமா? நீ உன் புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு ஸ்கூலுக்கு வருகிறாய், இல்லையா? உன்னோட வேலைகளை நீயே செய்து கொள்வாய் இல்லையா? நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி. என்னைப் போலக் கஷ்டப்பட வேண்டாம். ஜாலியாக விளையாடலாம். உங்க அம்மா, அப்பா, அண்ணா, தங்கை எல்லாருக்கும் நீ கஷ்டம் கொடுக்க நினைப்பாயா? எனக்கும் அப்படித்தான் இருக்கு. என்னாலே எல்லாருக்கும் கஷ்டம், எனக்கும் கஷ்டம். உடம்பு என்ன வேண்டுமானாலும் ஆகட்டும் என்றுதான் இன்னைக்கு யாருக்கும் தெரியாம இங்கே வந்துட்டேன். நாம்ப கொஞ்ச நேரம் ஏதாவது விளையாடலாமா?'' என்று ஆவலுடன் கேட்டாள் மதுரம்.

அவளுடைய சொற்கள் சுதாகரின் மனத்தில் முள்ளாகத் தைத்தன. அவன் அப்படியா இருக்கிறான்? தனக்குக் கால் சரியில்லை என்பதால் வீட்டில் எல்லாரும் தனக்குச் சேவை செய்ய வேண்டும் என்றல்லவா அவன் எண்ணுகிறான்! வனிதாவுக்கும் சங்கருக்கும் அவனால் எத்தனை கஷ்டங்கள்? அம்மாவிடம் வேறு புகார் சொல்லி அவர்களுக்குத் திட்டு வாங்கிக் கொடுப்பானே! தன் புத்தகப் பெட்டியை ஒரு நாள்கூட தான் தூக்கமாட்டானே!

நினைக்க நினைக்கச் சுதாகருக்குத் தன் மீதே வெறுப்பு ஏற்பட்டது. வெட்கம் உண்டாயிற்று. இருதயம் பலவீனம் உள்ள சின்னப் பெண்ணைவிட இவனுடைய கால் ஊனம் பெரிதில்லை. இந்தச் சின்னப் பெண் எத்தனை ஆவலாக இருக்கிறாள், தன் வேலைகளைச் செய்து கொள்ள! பிறருக்குக் கஷ்டம் கொடுப்பதற்காக எத்தனை வேதனைப் படுகிறாள்!

சுதாகருக்கு உடல் சிலிர்த்தது. மதுரத்தை அன்பும் ஆதரவுமாகப் பார்த்தான்.

''மதூ! இன்னைக்கு இருட்டுகிற நேரம் வந்துடுத்து. நாளையிலிருந்து விளையாடலாம்.... நாளைக்கு உங்க அம்மா விடுவாளா?''

''எப்படியாவது அடம் பிடித்து விளையாட வருவேன். எங்க வீடுகூட கிட்டத் தான் இருக்கு. இப்ப போகலாம், வர்றியா? கொஞ்ச நேரம் அந்த ஊஞ்சலில் ஆடிவிட்டுப் போகலாம், வா.....'' என்று எழுந்தாள். மதுரத்துடன் கைகோத்துக் கொண்டு சுதாகரும் ஊஞ்சலுக்குச் சென்றான்.

அன்று இரவு அவன் வீட்டில் ஒரு ரகளையும் ஏற்படவில்லை. வனிதாவும் சங்கரும் வியப்பும் பீதியுமாகத் தன்னை அடிக்கடி பார்ப்பதை உணர்ந்து சுதாகர் மனத்தினுள் சிரித்துக் கொண்டான். மறு நாள் அவன் யாரையும் அதிகாரம் பண்ணாமல் தானே எல்லாம் செய்து கொண்டு பள்ளிக்கூடத்துக்குத் தனியாகவே கிளம்பின போது அவன் அம்மாவே ஆச்சரியம் அடைந்தாள். அவனை எப்படித் திருத்துவது என்று குழம்பிக் கொண்டிருந்த அவன் அப்பா மனம் நிம்மதி அடைந்தார். சின்னப் பெண் மதுரம் சுதாகரின் வாழ்க்கையிலேயே ஒரு நல்ல திருப்பத்தை உண்டாக்கிவிட்ட சாதனை அவன் ஒருவனுக்குத்தானே தெரியும். இப்போது உங்களுக்கும் தெரியும். கோகுலம் படித்தால் அவனுடைய அப்பா அம்மாவுக்கும் தெரியும், இல்லையா!

நீதிக்கு முன்னால்!

முன்னொரு காலத்தில் ஹிஷாம் பின் அப்துல் மாலிக் என்ற சிறந்த கலீபா இருந்தார். அவர் ஆட்சியில் ஒரு சமயம் கலீபா ஹிஷாமின் மீதே ஒரு கிறிஸ்தவர் நில சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஒரு வழக்குச் சமர்ப்பித்தார்.

அப்பொழுது உமர் பின் அப்துல் அஜீஸ் என்பவர் நீதிபதியாக இருந்தார் உமர்பின் அப்துல் அஜீஸ் ஒரு சிறந்த நீதிபதி. எவருக்கும் அஞ்சாமல் நீதி வழங்குவார். வழக்குத் தொடுத்தவரை வாதி என்று சொல்கிறோம். எவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதோ அவரைப் பிரதிவாதி என்கிறோம். இந்த வழக்கிலே பிரதிவாதியான பாதுஷாவையே நீதிமன்றத்துக்கு வரும்படி நீதிபதி உமர் பின் அப்துல் அஜீஸ் அழைத்தார்.

ஹிஷாம் நீதிமன்றத்துக்கு வந்தார். அவர் அங்கு பிரதிவாதி என்ற நிலைமையில் வந்தவர். அதனால் அவருக்கு இராஜாங்க மரியாதை செய்யப்படவில்லை. அதற்கு மாறாக நீதிபதி உமர் அவரைச் சாதாரண ஒரு பிரஜையைப் போலவே மதித்து அதிகாரக் குரலுடன் பேசினார்.

நீதிபதி உமர்: வாதிக்கு எதிராகப் போய் நின்றுகொள்ளுங்கள். அங்கு நின்று கேட்கப்படும் கேள்விகளுக்கு மறுமொழி கூறுங்கள்.

கலீபா ஹிஷாம்: எனக்குப் பிரதியாக ஒரு வக்கீலை நியமிக்க நான் விரும்புகிறேன். அந்த வக்கீல் நீதி மன்றத்திலே எனக்காக மறுமொழி கூறுவார். இவ்வாறு செய்ய எனக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

நீதிபதி உமர்: முடியாது! முடியாது! நான் அநுமதி கொடுக்க மாட்டேன். நீரே நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும். கேட்கும் கேள்விகளுக்கு நீங்களே விளக்கம் தரவேண்டும்.

கலீபா ஹிஷாம்: இந்த உரிமை எனக்குக் கிடையாதா?

நீதிபதி உமர்: சாதாரணமாக உங்களுக்குப் பதிலாக வக்கீல் அனுப்ப உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் இந்த வழக்கில் வாதியானவர் வக்கீல் கொண்டு வரவில்லை. ஆகையால் உங்களுக்கும் வக்கீல் அனுப்பும் உரிமை இல்லை.

ஹிஷாம் தமது உயர் பதவியை நினைத்தார். சாதாரண கிறிஸ்தவப் பிரஜையுடன் தாம் நீதிமன்றத்திலே நிற்கும்படியாகக் கட்டாயப்படுத்தப்படுவதைக் கண்டு வெட்கப்பட்டார். மனம் நொந்தார். கடும் கோபம் கொண்டார். எனவே கோபத்தை அடக்க முடியாமல் நீதிபதி உமரை நோக்கிக் கடுமையான வார்த்தைகள் கூறிவிட்டார்.

நீதிபதி உமர்: ஒரு தடவை உங்களை நான் மன்னித்தேன்! இனிமேல் நீதி மன்றத்திலே இத்தகைய அவதூறான வார்த்தைகளைக் கூறினால் நான் உங்களுக்குத் தண்டனை விதித்தே தீருவேன்.


கலீபா ஹிஷாம் மௌனம் சாதித்தார். அப்பால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிபதி விசாரித்தார். வாதியாயிருந்த கிறிஸ்தவருடைய முறையீடு உண்மை என்று நீதிபதிக்குப் புலப்பட்டது. எனவே முஸ்லிம் பாதுஷாவுக்கு விரோதமாகவும் கிறிஸ்தவருக்குச் சாதகமாகவும் தீர்ப்புச் செய்தார்.

உண்மையான நீதிபதியானவன் தன் அரசனுக்கும் அஞ்ச மாட்டான், இறையச்சம் உள்ள சான்றோருக்கு உலகெல்லாம் அஞ்சகம். இதைப் படித்ததும்,


"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்து ஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி."

என்னும் வள்ளுவர் வாசகம் நம் நினைவுக்கு வருகிறதல்லவா?

— ஹாபிஸ் கா. மு. ஷேக் அப்துல் காதிர்



இரயிலின் கதை





ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் போகவோ, பொருள்களைக் கொண்டு செல்லவோ மனிதன் முதலில் மிருகங்களின் உதவியை நாடினான். சக்கரங்களை உருவாக்கத் தெரிந்து கொண்ட பிறகு வண்டிகளைச் செய்து அதில் மிருகங்களைப் பூட்டிப் போக்குவரத்துச் சாதனங்களாக்கிக் கொண்டான். தானே நடந்து சுமந்து கடந்ததை விட வாகனங்களின் உதவி மகத்தானதாக இருந்தது. நாளடைவில் மனிதனுக்கு இந்த வேகமும் வசதியும் கூடப் போதவில்லை. இன்னும் வேகமாகவும் வசதியாகவும் பிரயாணம் செய்வதற்குப் புதிய சாதனங்களைக் காண்பதில் அக்கறை காட்டலானான். அதன் விளைவாகத் தோன்றியவைதான் மோட்டார், ரயில், ஆகாய விமானம், கப்பல் எல்லாம்.

இன்று சராசரி மனிதன் சௌகரியமாகப் பிரயாணம் செய்யும் சாதனமாக இருப்பவை ரயில் வண்டிகள். இன்று அவை மின்சாரத்தினாலும் டீஸல் எண்ணெயினாலும் ஓடினாலும் கூட முதன் முதலில் ரயில் வண்டிகள் நீராவியின் சக்தியினால்தான் இயங்கின. நீராவிக்கு உள்ள சக்தியைக் கண்டு பிடித்தது யார் என்பதைப் பற்றியும் நீராவி யந்திரங்களை உருவாக்கி மனித குலத்துக்கு மகத்தான சேவை செய்தவர்களைப் பற்றியும் கோகுலத்தில் படித்திருப்பதை மறந்திருக்க மாட்டீர்கள். சமீபத்தில் நீராவி யந்திரத்தினால் பிரயாணம் செய்வதற்கு ஏற்ற வாகனங்களை உருவாக்கலாம் என்று கூறி, மாதிரி வாகனங்களையும் உருவாக்கிக் காட்டிய ரிச்சர்ட் ட்ரிவெதிக் என்பவரைப் பற்றிப் படித்தீர்கள் இல்லையா? அவர் மிகச் சிறந்த விஞ்ஞானி. ஆனால் பொறுமை இல்லாதவர். அதுகூடத் தவறு. அதிர்ஷ்டமில்லாதவர். ரயில் எஞ்சினுக்கு வித்திட்டவர் ட்ரிவெதிக் என்றாலும் பலன் கண்டு புகழ் பெற்றவர் ஜார்ஜ் ஸ்டீபன்ஸன்தான். ரயிலைக் கண்டவர் யார் என்றால் இன்று இவர் பெயரைத்தான் யாரும் சொல்லுவார்கள்.

ஸ்டீபன்ஸன் நீராவி எஞ்சினைக் காண்பதற்கு முன்பு ரயில் இல்லையா? இருந்தது. ரயில் என்பது என்ன? வழுவழுப்பான சம தரையில் தண்டவாளங்களின் மீதாக வாகன்களை இழுத்துச் செல்லும் அமைப்புக்கு ரயில் என்று பெயர். இத்தகைய வாகன்களைக் குதிரைகள் இழுத்துச் சென்று கொண்டிருந்தன. எங்கிருந்து, எதற்காக?

நிலக்கரிச் சுரங்கங்களில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரியை அப்புறப்படுத்திக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக ரயில் பாதைகள் பயன்பட்டு வந்தன. நிலக்கரிச் சுரங்கங்களில் தேங்கும் தண்ணீரை அப்புறப்படுத்தியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதற்காகப் பிறந்தது நீராவி யந்திரம். இந்த நீராவி யந்திரத்தைக் கொண்டு தானாக இயங்கும் வாகனங்களை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டார்கள். இதில் முழு வெற்றி கண்டு பிரயாணிகள் வண்டியை உருவாக்கி ஓட்டிக் காட்டியவர் ஜார்ஜ் ஸ்டீபன்ஸன்.

ஸ்டீபன்ஸன் பெரிய அறிவாளியா? விஞ்ஞானியா? பொறியியல் வல்லுநரா? இல்லவே இல்லை. பள்ளிப் படிப்பே இல்லாதவர். அவரா ரயில் வண்டி என்ற மகத்தான சாதனத்தைக் கண்டுபிடித்தார்? எப்படி?


இங்கிலாந்தில் உள்ள நியூகாஸில் என்னும் இடத்திலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள ஒரு குக்கிராமத்தின்

குடிசை வீட்டில் ஒரு குழந்தை பிறந்தது, 1781ம் ஆண்டு. அந்தக் குடிசைக்கு 'ஹை ஸ்ட்ரீட் ஹவுஸ்' என்று பெயர். இந்தக் குடிசை வாசல் வழியாக வைலாம் என்ற நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து செல்லும் டிராம்வே (தண்டவாளப் பாதை) சென்றது. பிறந்த குழந்தை பெரியவனானபோது



நிலக்கரி நிறைந்த வாகன்களைக் குதிரைகள் இழுத்துச்செல்வதை வேடிக்கை பார்த்தபடி வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தது. இந்தக் குழந்தைதான் ரயில் வண்டியை உருவாக்கிய ஜார்ஜ் ஸ்டீபன்ஸன்.

ஜார்ஜின் தகப்பனார் அங்குள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் பயர்மேனாகப் பணிபுரிந்து வந்தார். சுரங்கத்து நீரை வெளியேற்றும் நீராவி யந்திரம் இயங்குவதற்கு உலையிலே நிலக்கரியை அள்ளிப் போடும் வேலை. சொற்ப வருமானம் தான். ஆகவே மகன் ஜார்ஜைப் பள்ளிக்கு அனுப்ப முடியவில்லை. ஜார்ஜுக்கு எட்டு வயதாயிற்று. குடும்பத்துக்கு உதவ அவனும் வேலை பார்க்க வேண்டிய நிலை. ஜார்ஜ் பார்த்த முதல் வேலை என்ன தெரியுமா? அந்த ஊரில் கணவனை இழந்த விதவை ஒருத்தி இருந்தாள். அவளிடம் நிறையப் பசு மாடுகள் இருந்தன. அந்த மாடுகளை மேய்த்து வரும் காரியத்தை ஜார்ஜிடம் ஒப்படைத்தாள் அவள். மாடு மேய்க்கும் வேலை! அது மட்டுமல்ல. இன்னொரு வேலையையும் செய்தார் ஜார்ஜ். நிலக்கரி வாகன்களைச் சுமந்து கொண்டு குதிரைகள் வரும்போது சாலைக் கதவுகளை மூடி மறுபடி திறக்க வேண்டும்.



(ரயில் வண்டிகள் கடந்து செல்ல இப்போது லெவல் கிராசிங் கேட்டுக்களை மூடுகிறார்களே அதே மாதிரி) மாடுகள் சிதறி ஓடி விடாதிருக்க ஜார்ஜ் இந்த வேலையையும் ஏற்றுக் கொண்டார். இதற்காக இவருக்குக் கிடைத்த ஊதியம் என்ன தெரியுமா? ஒரு நாளைக்கு இரண்டு பென்னிகள்—வாரத்துக்கு ஒரு ஷில்லிங்!


ஜார்ஜ் தன் நண்பர்களுடன் ஓடைக் கரையில் விளையாடிக் கொண்டிருப்பதை ஜார்ஜின் அண்டை அயலார்கள் அடிக்கடி பார்ப்பார்கள். என்ன விளையாட்டு? களிமண், சிறு மரக்கட்டை, பலகைகளைக் கொண்டு ஜார்ஜ் 'பாய்லர் கூடங்களைப் போலவும், பம்ப் யந்திரங்களைப் போலவும் செய்து காட்டுவான்.



ஜார்ஜுக்குப் பன்னிரண்டு வயது ஆயிற்று. நிலக்கரிச் சுரங்கத்திலுள்ள கற்களையும் நிலக்கரிக் கழிவுத் துண்டுகளையும் பொறுக்கித் துப்புரவு செய்யும் வேலையில் அமர்த்தப்பட்டான். இந்த நிலக்கரித் தூளைப் பாய்லரில் எரிக்கப் பயன்படுத்துவார்கள். இந்த வேலையின் போது நேரம் கிடைத்த போதெல்லாம் நீராவி யந்திரத்தின் அருகே போய் அது வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருப்பான்.




இந்த வயதிலும் ஜார்ஜுக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது. கறுப்பு காலர்ட்டன் நிலக்கரிச் சுரங்கத்தில்



ஜார்ஜ் தன் தகப்பனாரின் மேற்பார்வையின் கீழ் உதவி ஃபயர் மேனாக நியமிக்கப்பட்டான். அப்போது அவனுக்குப் பதினாறு வயது. வெகு சீக்கிரமே ஜார்ஜ் பிரதம ஃபயர்மேனாக்கப்பட்டான். யந்திரங்கள் எப்படி இயங்குகின்றன என்ற நுணுக்கங்களை அறிந்துகொள்ள முயல்வான். யந்திரங்களைப் பிரித்துப் போட்டு, மறுபடி பூட்டக் கூடிய அளவுக்கு ஜார்ஜ் வல்லவனானான். ஆனாலும் சுரங்கத்தின் மானேஜர் விஜயம் செய்யும் போதெல்லாம் ஜார்ஜை ஒளிந்து கொள்ளும்படி கூறுவார்கள். ஃபயர்மேன் என்ற பொறுப்பு மிக்கவேலைக்கு உரிய வயதைப் பையன் ஜார்ஜ் இன்னும் அடையவில்லை என்று மானேஜர் ஆட்சேபிப்பாரோ என்ற பயம்தான் இதற்குக் காரணம்.

பதினெட்டாவது வயதில் ஜார்ஜ் தன் வாழ்வின் குறிக்கோளான யந்திரங்களை இயக்கும் தகுதி படைத்த 'என்ஜின் மேனாக'ப் பதவி உயர்வு பெற்றார். இப்போது ஜார்ஜ் தன் தகப்பனாருக்கும் மேலான தகுதி வாய்ந்த பதவியில் இருந்தான். திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்தக்



கூடிய அளவுக்கு வருவாய் கிடைத்தது. 'டோலி பிட்' என்ற சுரங்கத்துக்கு வேலை மாற்றம் செய்துகொண்டான். இப்போது ஜார்ஜின் வருவாய் வாரத்துக்கு ஒரு பவுன். இது தவிரக் காலணிகளைப் பழுது பார்த்துக் கொடுத்தும் தன் வருவாயைப் பெருக்கிக் கொண்டான்.

இந்தச் சுரங்கத்தில் என்ஜின்மேனாக வேலைபார்க்கும்போது ஒரு சமயம் தன் சக தொழிலாளியுடன் சண்டையிட வேண்டி வந்தது. மோதலுக்கு ஆளானவனின் பெயர் நெட் நெல்ஸன். பக்கா ரௌடி என்று புகழ் பெற்றவன் இந்த நெல்சன். துஷ்டனைக் கண்டால் தூர



விலகு என்று யாரும் அவனைக் கண்டால் ஒதுங்கி ஓடுவார்கள். ஜார்ஜின் புகழில் பொறாமை கொண்ட நெட் வலுச் சண்டைக்கு அழைத்தான். பிளாக் காலர்ட்டன் சுரங்கத் தொழிலாளிகளிடையே பெருத்த பரபரப்பு உண்டாயிற்று. 'ஜார்ஜ் சாகத்தான் போகிறான்' என்ற முடிவு கட்டினர் சிலர். ஆனால் ஒப்பந்தப்படி குறிப்பிட்ட வேளையில் நெட்டும் ஜார்ஜூம் மோதியபோது யாருமே எதிர்பாராத வகையில் ஜார்ஜ் ஆவேசமாக ரௌடி நெட்டைத் தாக்கினார். நெட் திருப்பித் தாக்கச் சந்தர்ப்பமே தரவில்லை. மயங்கி விழுந்த நெட்டை அவன் வீட்டுக்குத் தூக்கிக் கொண்டு தான் போனார்கள்.

பதினெட்டு வயதாகியும் ஜார்ஜூக்கு எழுதப் படிக்கத் தெரியவில்லை. படிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது ஜார்ஜ் ஸ்டீபன்ஸனுக்கு. ஆகவே மாலை வேளைகளில் ஓர் ஆசிரியரை நாடிப் போய்க் கல்வி கற்கலானார். எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டதும் கணிதத்தில் விசேஷ கவனம் செலுத்தலானார்.




பொறி இயல் வல்லுநராக ஜார்ஜூக்குக் கிடைத்த முதல்வெற்றி நார்த்தம்பர்லாந்தில் உள்ள இல்லிங்வொர்த் என்னும் இடத்தில்தான். இங்கு 'ஹை பிட்' என்று ஒரு நிலக்கரிச் சுரங்கம். இங்கு ஊறும் நீரை இறைக்க நியூகோமனின்

நீராவி யந்திரம் அமைக்கப்பட்டிருந்தது. அது பழுதுபட்டு நீரை இறைக்க முடியாமல் சுரங்க வேலை தடைப்பட்டுக் கிடந்தது. ஒரே வாரத்தில் அதைச் சரி செய்து ஓட்டிக் காண்பிப்பதாகக் கூறினார் ஜார்ஜ். ஆனால் அதற்கு உதவியாகத் தன்னுடைய ஆட்களையே




தான் அமர்த்திக் கொள்ளுவேன் என்னும் நிபந்தனை விதித்தார். சுரங்க மானேஜருக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. எப்படியோ வேலையானால் சரி என்ற நிலை. ஜார்ஜ் வெற்றியடைந்தால் தான் அவரை வாழவைப்பதாகக் கூறினார் மானேஜர். ஜார்ஜ் வாக்களித்தபடி தம் ஆட்களின் உதவியோடு ஒரே வாரத்தில் பழுதுபட்ட யந்திரத்தைச் சரிசெய்து ஓடவைத்தார். ஏழு நாட்களுக்குப் பிறகு சுரங்கத்தில் துளித் தண்ணீர் இல்லை. நன்றாகக் காய்ந்து போய் வேலை தொடங்கத் தயாராகி விட்டது. யந்திரங்களிடம் அத்தனை ஈடுபாடு, ஜார்ஜுக்கு. எந்த யந்திரத்தையும் அக்கு அக்காகப் பிரித்துப் போட்டுப் பூட்டிவிடுவார்.

குதிரைகள் இழுக்கும் வாகன்களைக் கொண்ட ரயில்வேயிலும் ஜார்ஜுக்கு




ஈடுபாடு உண்டு. வலுவான உலோக ரயில் பாதை அமைக்க யோசனைகளைக் கூறி உதவினார்.

கில்லிங்வொர்த்தில் பணியாற்றும் போது ஸ்டீபன்ஸன் அருகிலுள்ள வைலாம் சுரங்கத்துக்குப் போனார்



அங்கு 'வில்லியம் ஹெட்லே' என்பவர் ஒரு லோகோமோட்டில் யந்திரத்தை உருவாக்கி இயக்கி வந்தார். அதற்கு பஃபிங் பில்லி (Puffing Billy) என்று பெயர். 1813ம் ஆண்டு உருவாக்கப்பட்ட யந்திரம் அது. சுரங்கத்திலிருந்து நிலக்கரி நிரம்பிய வண்டிகளை இழுத்துச் செல்லப் பயன்பட்டு வந்தது அந்த பில்லி. அம்மாதிரி மூன்று யந்திரங்கள் அங்கு வேலை செய்தன. இதைப் பார்த்து வந்த ஸ்டீபன்ஸன், தன் சுரங்கத்துக்கு வந்ததும் அதன் நிர்வாகிகளிடம் அதே மாதிரி ஒரு யந்திரத்தைத் தாம் உருவாக்கிக் குதிரைகளுக்கு விடுதலை அளிப்பதாகக் கூறினார். நிர்வாகிகளும் சம்மதித்தனர். 1815ல் ஜார்ஜ் தம்முடைய முதல் நீராவி யந்திரத்தைச் செய்தார். இதற்கு 0–4–0 என்று பெயர். ஆறு டன் எடையுள்ள இது குதிரைகளுக்குப் பதில் சுரங்கத்திலிருந்து வாகன்களை ரயில் பாதையில் இழுத்துப் போயிற்று. பஃபிங் பில்லியின் அப்பட்டமான காப்பி இது. ஆனால் நன்றாகவே வேலை செய்தது.

ஸ்டீபன்ஸின் கவனம் ரயில்வேயில் மட்டும் முடங்கிவிடவில்லை. இன்னும் வேறு பல புதுமைகளைக் காண்பதிலும் முனைந்தார். அவைகளில் ஒன்று சுரங்கத் தொழிலாளி பயன்படுத்தப் பாது




காப்பான விளக்கும் ஒன்று. 'டேவி' என்பவர் தயாரித்திருந்த சுரங்க விளக்கைப் போலவே இருந்தது இது. 'டேவி'யின் ஆதரவாளர்கள் ஜார்ஜ் இப்படியொரு விஞ்ஞான ரீதியான விளக்கைத் தயாரிக்கும் அளவுக்குப் படிப்பறிவு இல்லாதவர் என்று வாதித்தனர். பாதுகாப்பான சுரங்க விளக்கை




முதலில் கண்டது டேவியா, ஸ்டீபன்ஸனா என்பதை முடிவுகட்ட நீதிமன்றம் வரை இந்த விவகாரம் போயிற்று. ஹம்ப்ரி டேவி சுரங்க விளக்கில் ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கும்போது நார்த்தம்பர்லாந்தில் உள்ள சுரங்கத் தொழிலாளிகள் ஸ்டீபன்ஸனின் விளக்கான 'ஜியார்டி'யைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை நீதிமன்றத்தில் நிரூபித்தார்கள். அப்படியும் நார்த்தம்பர்லாந்துக்கு வெளியே பாதுகாப்பு விளக்கைக் கண்ட பெருமை டேவிக்குத்தான் போயிற்று.

கில்லிங்வொர்த் சுரங்கத்துக்கு ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் நிர்மாணித்துக் கொடுத்த ஸ்டீம் லோகோமோடிவ் நல்ல விதமாக வேலை செய்வதை அறிந்த



மற்ற சுரங்க முதலாளிகளும் தங்கள் தங்கள் சுரங்கங்களுக்கும் சொந்தமாக ஸ்டீம் லோகோமோடிவ்களையும் அத்துடன் முழுமையான ரயில்வே முறையையும் அமைத்துக் கொள்ள விரும்பினார்கள். ஸ்டீபன்ஸன் தமது முதல் என்ஜினை ஹெல்டன் சுரங்கத்துக்காக 1822ல் நிர்மாணித்துக் கொடுத்தார். அன்று அவர் உருவாக்கிய முதல் யந்திரம் இன்றும் இயங்கும் நிலையில் உள்ளது. நியூயார்க்கிலுள்ள ரயில்வே மியூஸியத்தில் இந்த முதல் என்ஜின் பழுதுபடாத நிலையில் காட்சிப் பொருளாக உள்ளது. ரயில்வே நூற்றாண்டு விழாவின்போது 1925ல் டார்லிங்டனில் ஊர்வலமாக நீராவியைக் கொப்பளித்தபடி ஓடியது இது!


ஸ்டாக்டனிலிருந்து டார்லிங்டனுக்கு ரயில்வே அமைக்கும் வேலையில் 1821ல் ஸ்டீபன்ஸனை என்ஜினியராக்கி நியமித்தார்கள். இந்தப் பாதைக்கு யோசனை கூறியது, அளவு எடுத்தது, மேற்பார்வை யிட்டது, இதற்கான லோகோமோடிவை உருவாக்கியது எல்லாமே ஜார்ஜ் ஸ்டீபன்ஸன்தான். 1825ல் இந்த ரயில் பாதை இயங்க ஆரம்பித்தது. பொதுமக்கள் பிரயாணம் செய்வதற்காக அமைக்கப்பட்ட முதல் ரயில்வேப் பாதை இதுதான். செப்டம்பர் மாதம் 27ந் தேதி (1825ம் ஆண்டு) லோகோமோஷன் நெ. 1 என்ற இந்த வண்டி 170 பிரயாணிகளைச் சுமந்து சென்றது.



ஸ்டீம் லோகோமோடிவ் ஜனங்களை ஏற்றிச் சென்றது இந்த ஒரு சந்தர்ப்பத்தில்தான். ரயில் வண்டிகள் ஆரம்ப காலத்தில் சாமான்களை ஏற்றிச் செல்லவே பயன்பட்டன. ஆரம்ப கால ரயில்வேயில் குதிரைகள் இழுத்துச் சென்ற கோச்சுக்களில்தான் மக்கள் பிரயாணம் செய்து வந்தார்கள்.


ஜார்ஜ் ஸ்டீபன்ஸனின் கவனமெல்லாம் புதிது புதிதாக ரயில் பாதைகளைத் திட்டமிடுவதிலும் அமைப்பதிலும் மேற்பார்வை யிடுவதிலும் இருந்தது. புதிய அமைப்புக்களில் லோகோமோடிவ்களை உருவாக்கவும் அபிவிருத்தி செய்யவும் முடியாத நிலையில்

இருந்தார். ஆகவே தம் மகனின் பெயரில் 'ராபர்ட் ஸ்டீபன்ஸன் அண்ட் கம்பெனி என்ற ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கி அதை அவன் பொறுப்பில் விட்டார். இங்கிலாந்தின் தென் பகுதியும் ரயில் பாதை அமைப்பதில் ஆர்வம் காட்டியது. இதையும் ஸ்டீபன்ஸனே



மேற்கொண்டு நிர்மாணித்துக் கொடுத்தார். இவர்களுக்காகத் தயாரித்த இன்ஜினுக்கு 'இன்விக்டா' என்று பெயர்.

உழைப்பினால் ஒருவன் உயரும்போது, அவனுக்குப் புகழ் கூடும்போது இதைக் கண்டு பொறுக்காது பொறாமை கொள்வார்கள் சிலர். இது ஸ்டீபன்ஸனின் வாழ்விலும் ஏற்பட்டது. இவரது ஸ்டீம் லோகோமோடிவ்களைப் போலவே வேறு சிலரும் உருவாக்கினார்கள். எது சிறந்தது என்பதை நிர்ணயிக்கும் நிலை ஏற்பட்டது. 1829ம் ஆண்டு அக்டோபர் மாதம் ரெயின் ஹில் என்னும் இடத்தில் ஒரு போட்டிக்கு ஏற்பாடு ஆயிற்று. அதில் பல ரயில் வண்டிகள் கலந்து கொண்டன. முடிவில் வெற்றி கொண்டது ஜார்ஜ் ஸ்டீபன்ஸனின் 'ராக்கெட்' (தலைப்பில் உள்ள படம்) என்ற என்ஜின்தான். 500 பவுன் பரிசு



மட்டுமல்ல; சரித்திரத்தில் அழியாத புகழையும் பொறித்தது 'ராக்கெட்' ஏழு டன் எடையுடைய இது 17 டன் சுமையை இழுத்துக் கொண்டு மணிக்கு இருபது மைல் வேகத்தில் மற்ற எல்லா வண்டிகளையும் பின்னுக்குத் தள்ளி முன்னால் வந்தது.

ரயில் பாதைகள் அமைக்கும் பணியில் எல்லாரும் ஜார்ஜ் ஸ்டீபன்ஸனையே தேடி ஓடினார்கள். நீராவியின் சக்தியைக் கொண்டு ரயில் பாதைகளை உருவாக்கிப் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தி இங்கிலாந்தின் புகழையும் பெருமையையும் உயர்த்தியவர் ஜார்ஜ் ஸ்டீபன்ஸன்.

ஜார்ஜ் தமது கடைசிக் காலத்தில் விவசாயத்திலும் தோட்டக் கலையிலும் ஆர்வம் காட்டி வந்தார். கண்ணாடி வீடு அமைத்து அதில் உஷ்ணப் பிரதேசத்துப் பழங்களையும் செடிகளையும் பயிர் செய்தார். பிரிட்டனின் ரயில்வே அமைப்பை உருவாக்கிக் கொடுத்த ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் 1848ல் தமது 68வது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்தார். அவரது பூத உடல் செஸ்டர்பீல்டு என்னுமிடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

அட்டையில் :

மம்மியே வாங்கித் தந்த
மட்டிலா மகிழ்ச்சிக் கனியே!
பொம்மையே. உயிர் நீயெனக்கு
போவது எங்கே, தனியே!

-குடுக்கையார்.

வண்ணப்படம்: ஹரிகோபால்



சிரிக்கச் சிரிக்க



அப்பா: திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற பழமொழி தெரியுமா?

மகன்: அதெல்லாம் அந்தக் காலம் அப்பா. திரைகடல் ஓடியும் திரைப் படம் பார்—இதுதானப்பா இந்தக் காலத்துப் புதுமொழி!

—எல். மயில்வாகனன்

○



டீச்சர்: கீதா, ஏன் இன்னிக்கு லேட்?

கீதா: வரும் வழியில், 'பள்ளிக்கூடம் மெதுவாகப்போ'ன்னு ஒரு போர்டு பார்த்தேன் டீச்சர். அதனுல்தான்!

—எம். தாஹா இப்ராஹீம் புஹாரி



முதல் பையன்: இன்று பரீட்சை எப்படிடா?

இரண்டாவது பையன்: ரொம்பச் சுலபம்; எல்லாக் கேள்விகளுக்கும் விடை நன்ருகத் தெரிந்தது. ஆனுல் கொஞ்சம் எட்டி எட்டிப் பார்க்க வேண்டியிருந்தது!


- எம். எஸ்.

○

கணக்கு வாத்தியார்: ஒரு கோட்டை இழு.

மாணவன்: யாருடைய கோட்டை சார்?

—ஜி. ரேணுகா சாந்தி





ஒருவர்: என் மனைவியோடு பேசி ஒரு வருஷம் ஆச்சு.

மற்றவர்: ஏன் ஏதாவது சண்டையா?

ஒருவர்: சண்டை ஒண்ணும் இல்லே. அவள் என்னைப் பேச விட்டால்தானே?

—து. இராசேந்திரன்



அப்பா: டேய்! பள்ளிக்கூடத்தில் நல்லபடியாக நடந்து கொள்ளுகிருயா?

பையன்: இது என்ன கேள்வி? 'ஆபீஸில் நல்லபடியாக நடந்து கொள்ளுகிறீர்களா?' என்று என்றைக்காவது உங்களை நான் கேட்டிருக்கிறேனு?

—எம். எஸ்.

நந்து சுந்து மந்து (21)

சித்திரம்: செல்லம்




இதென்னது? என்ன இப்படி வெறி புடிச்சமாதிரி ஓடறே? ஏய்... ஏய்... நிதானமாப் போ... மெதுவாப் போ... சேணமில்லாத உன் முதுகிலே இந்த வேகத்துக்கு என்னாலே உக்காந்து வர முடியாது...
யம்மாடி! ஆத்திலே குதிச்சப்புறமும் இப்படி ஓடுறே...? நான் கீழே விழுந்துடுவேன்... அவங்களும் கிட்ட வந்துட்டாங்களே என்ன செய்வேன்...?
நல்ல வேளை தோதாக ஒரு மரக்கிளை தாழ்வாக இருந்ததோ தொத்திக் கொண்டேன். இல்லேன்னு...
பயல் வகையாகச் சிக்கிக் கொண்டான். இந்தத் தடவை அவன் நம்மிட மிருந்து தப்பவே முடியாது.
இந்தக் காய்ச்சராயிலே கால்லேயே காணோமே! ஐயோ! என் பிடி நழுவுதே... நான்... இதென்னது...?
போலீசாருக்கு ஆத்திரமான ஆத்திரம். மந்துவை நந்து சந்துவிடம் கொண்டுவந்து ஒப்படைத்துவிட்டுக் கடுமையாக எச்சரித்து போகிறார்கள்.
உங்களோட இந்தக் குரங்காலே எங்களுக்கு ரொம்பத் தொல்லை, அவமானம். இது ஒரு குற்றவாளிக்கு உடந்தையாக அவன் தப்பிப் போக உதவிக்கிட்டிருக்குன்னு சொன்னா நீங்க நம்பல்லே. உங்களையும் கம்பி எண்ண வைத்தால் தான் நம்புவீங்க.

தங்கக்கிளி

எஸ். வஜ்ரவேலு

கிட்டு, பட்டு இரண்டு பேரும் அண்ணன் தங்கைகள், இவர்களுக்குப் 'பாலு'ன்னு தம்பி ஒருத்தனும் இருக்கிறான்.

கிட்டு நாலணாக் காசை எடுத்துக்கிட்டு கடைத் தெருப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தான்.

அவன் எதிரே, கிளி இருக்கிற கூண்டோடு குறவன் ஒருவன் வந்துகொண்டிருந்தான். கிட்டுவைப் பார்த்தவுடன் அவன் நின்றுவிட்டான்.

'' சாமி ! இந்தப் பச்சைக் கிளி ரொம்ப நல்லதுங்க.... கூண்டோட எடுத்துக்கிட்டு ஏதாவது காசு கொடுங்க !'' என்றான்.

கிட்டுவுக்குக் கிளியோடு கூடிய கூண்டை ரொம்பவும் பிடித்திருந்தது. ஆனால் அவன்கிட்டே நாலணா காசுதானே இருக்கிறது? 'இந்தப் பணத்துக்குப் போயி, அந்தக் குறவன் கிளியையும், கூண்டையும் கொடுப்பானா ? அப்படி அவன் கொடுத்தாலும் வீட்டுக்குக் கொண்டு போயி எங்கே வைச்சு வளர்க்கிறது ? பார்த்துக்கிறது.....?

'அப்பா தான் சும்மா விடுவாரா ? அம்மாவையாகிலும் சும்மா இருக்கச் செய்திடலாம். ஆனால் அப்பா? ஐயையோ! அப்பாவிடம் நன்றாக உதை தான் வாங்க வேண்டும்' என்று யோசித்துக் கொண்டே நின்றான்.

கிளிக் கூண்டை வைச்சுக்கிட்டு இருந்த குறவனும் கிட்டுவைச் சும்மா விடவில்லை.

''சாமி... சாமி.... எத்தனை காசு வேணுமின்னாலும் கொடுங்க சாமி. நான் வாங்கிக்கறேன் சாமி, சாமின்னு ரொம்பவும் கிட்டு கிட்டே கெஞ்சினான்.

உடனே கிட்டு கால் சராய்ப் பைக்குள்ளே கையைவிட்டு நாலணா காசை எடுத்து நீட்டினான். ''குருவிக்காரரே ! இந்தா பாரு. இந்த நாலணாதான் என் கிட்டே இருக்கு. வேறே காசு எதுவும் இல்லை ! வேணுமின்னா இதை வாங்கிக்கிட்டு, கிளிக் கூண்டை கொடு!'' என்று கூறினான்.

குறவன் சட்டென நாலணாக் காசை வாங்கிக் கொண்டு, ''இந்தாங்க சாமி, கிளிக் கூண்டு!'' என்று சொல்லி, கிட்டுவிடம் கொடுத்துவிட்டுப் போய் விட்டான்.

கிட்டு கிளி கூண்டை எடுத்துக்கிட்டு, ஓட்டமும் நடையுமாக வீட்டின் தோட்டத்துப் பக்கம் வந்து சேர்ந்தான். கிட்டுவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த பட்டு, அவன் பின்னாலேயே ஓடோடி வந்தாள். கிளிக் கூண்டையும் கூண்டுக்குள்ளே இருக்கும் கிளியையும் பார்த்தவுடனே ஒரே மகிழ்ச்சி அடைந்தாள்.

''கிட்டு.... கிளி ரொம்பவும் அழகா இருக்குடா....! கொஞ்சம் தொட்டுப் பார்க்கட்டுமா?'' என்று கெஞ்சினாள்.

கிட்டு உடனே, ''பட்டு, இந்தக் கிளியையும், கூண்டையும் நம்ம அப்பாவுக்குத் தெரியாமல் தோட்டத்திலேயே வைச்சிடுவோம். நீயும் நானுமா ரொம்ப ஜாக்கிரதையாப் பார்த்துக்கணும்....'' என்றான்.

''ஆமாம், கிட்டு ! நம்ம தம்பி பாலு கொஞ்சம் வாலுடா. அவன் விஷயத்துலே நாம ரொம்ப ஜாக்கிறதையா இருக்கணும்டா! என்ன ?'' என்றாள்.

''ஆமாம், பட்டு!'' என்றான் கிட்டு. ''பட்டு இந்தக் கூண்டை நம்ம தோட்டத்து மூலையிலே யாருக்கும் தெரியாமல் மாட்டி வைச்சுடலாம்.... நானும் நீயும் அடிக்கடி வந்து கவனிச்சுக்கலாம்'' என்றான் கிட்டு.

ஒரு வாரம் ஆயிற்று !.... அன்றைக்குப் பள்ளிக்கூடம் விடுமுறை....

கிட்டு, பட்டு, பக்கத்து வீட்டு பாரி, கோடி வீட்டுக் கோபு இன்னும் மற்றவர்கள் எல்லாம் கிட்டுவின் வீட்டுத் தோட்டத்தில் ஒன்றாகக் கூடினார்கள். விளையாட ஆரம்பித்தார்கள். தோட்டத்திலே யாரு எங்கே வேண்டுமானாலும் மறைந்து கொள்ளலாம். ஒருத்தர் எல்லோரையும் கண்டு பிடிக்கணும்!

எல்லோரும் ஆர்வத்தோட நேரம் போனதே தெரியாமல் விளையாடினர். பட்டுவும் கொஞ்சம்கூடச் சளைக்கவில்லை. பையன்களைப் போலவே, குட்டையான, அடர்த்தியான இலைகள் உள்ள மரங்களில் எல்லாம் ஏறி, ஏறி — மறைந்து கொண்டாள். அவளைக் கண்டு பிடிக்க முயன்று ஒவ்வொருவரும் ஏமாந்து போயினர்.

தோட்டத்தின் மூலையிலே தொங்க விட்டிருந்த கூண்டுக்குள்ளேயிருந்த கிளி, இவர்கள் விளையாட்டையெல்லாம்

சுறுசுறுப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தது.

இருட்டும் நேரம் வந்தது. எல்லோரும் விளையாட்டை நிறுத்தினர். அவரவர்கள் வீட்டுக்குப் போயினர்.

பட்டுவும், கிட்டுவும் தோட்டத்தில் உள்ள கிணற்றடிப் பக்கம் கை, கால் சுத்தம் செய்யப் போனார்கள். அந்த நேரத்தில் பட்டு, ''கிட்டு'' எனச் சத்தம் போட்டாள்.

''என்ன பட்டு? என்ன?'' என்றான் கிட்டு ஓடி வந்தபடி.

''கிட்டு ! என் கழுத்தைப் பாரு ! தங்கச் சங்கிலியைக் காணோம்!....... ஐயையோ...! இப்ப என்ன பண்றது டா ? அப்பா அம்மாவுக்கு என்ன பதில் சொல்றது ?'' துடிதுடித்துப் போனாள் பட்டு.

கிட்டுவுக்கும் அந்த நிலைதான். இனி என்ன பண்ணுவது? ஆளுக்கு ஓர் இடமாகத் தோட்டத்தைச் சுற்றிச் சுற்றித் தேடிப் பார்த்தார்கள். ஒவ்வொரு மரத்தடிப் பக்கமும், குப்பை கொட்டும் இடத்திலும் மற்றும் எல்லா இடத்தையும் பார்த்துவிட்டார்கள். ஓர் இடம்கூடப் பாக்கி இல்லை.

'இனி என்ன செய்வது?' எனப் பட்டுவும் கிட்டுவும் சோர்ந்து போய் அப்படியே உட்கார்ந்து விட்டார்கள். அந்த நேரத்திலே இவர்கள் தம்பி பாலு தோட்டத்துக்குள்ளே வந்தான். பட்டுவும், கிட்டுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தனர். அவன் வந்ததைக் கவனிக்கவில்லை. பாலு சும்மா இருக்கவில்லை. நேரே கிளி இருக்கிற கூண்டுப் பக்கம் ஓடினான். ஆசையாகக் கிளியைத் தொட்டுப் பார்க்கலாம் என்று கூண்டுக் கதவைத் திறந்தான்.

கூண்டைத் திறந்ததுதான் தாமதம் கிளி, கூண்டைவிட்டு விர்ரெனப் பறந்து தோட்டத்தினுள் புகுந்தது.

இதை எதிர்பார்க்காத பாலு, ''ஐயோ ! கிளி... கிளி'' எனச் சத்தம் போட்டான்.

சோர்ந்து உட்கார்ந்திருந்த பட்டுவும், கிட்டுவும் திடுக்கிட்டு எழுந்தனர்.

''டேய், பாலு! என்ன வேலை செய்தேடா ?'' என்று கிட்டு கத்திக் கொண்டு கிளிக் கூண்டின் பக்கம் ஓடினான். அவன் பின்னாலேயே பட்டுவும் ஓடினாள்.

அந்த நேரத்தில் வீட்டுக்குள்ளே யிருந்து அவர்கள் அம்மா கூப்பிடும் குரல் கேட்டு மீண்டும் தங்கச் சங்கிலியைத் தேட ஆரம்பித்தனர். அத்துடன் கூண்டை விட்டுப் பறந்துபோன கிளியும் எங்கே இருக்கிறது என்றும் தேடிப் பார்த்தனர்.

விளையாட்டின் போது பட்டு ஏறியிருந்த மரத்தின் அடர்த்தியான இலைகளுக்கு இடையிலே உட்கார்ந்து கொண்டு கிளி எதையோ கொத்திக் கொண்டிருந்தது.

அவர்கள் அம்மாவும் தோட்டத்துப் பக்கம் வந்து கிட்டுவையும், பட்டு, பாலுவையும் உள்ளே வரும்படி அழைத்தார்கள்.


கிட்டுவும், பட்டுவும் கிளியைக் கண்டுபிடித்து அதையே பார்த்துக் கொண்டிருந்ததைத் தோட்டத்துப் பக்கம் வந்த அம்மாவும் அப்பாவும் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

கொஞ்ச நேரத்திலே கிளி பட்டுவின் தங்கச் சங்கிலியை மரத்தின் இலைகளுக்கிடையே இருந்ததை தன் அலகினால் கொத்திக் கொண்டு பறந்து வந்து பட்டுவின் தோள் மீது உட்கார்ந்தது. எல்லோரும் அதிசயத்துடன் கிளியையே பார்த்தனர்.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தோட்டத்திலே கிட்டுவும், பட்டுவும் கிளி ஒன்றை வளர்த்து வந்த விஷயம் அப்போதுதான் தெரிந்தது.

பாலு, கிளிக்கூண்டைத் தூக்கிக் கொண்டு ஓடோடி வந்தான். கிட்டுவின் அப்பா ரொம்பவும் ஆச்சரியப்பட்டார். கிளி இப்ப சாதாரணக் கிளி அல்ல, எல்லோருக்கும் தங்கக் கிளி! தங்கச் சங்கிலியைத் தேடிக் கண்டுபிடித்தது அல்லவா? இப்ப கிளிக் கூண்டு தோட்டத்தில் இல்லை.

பட்டுவும், கிட்டுவும் கிளிக்கூண்டை வீட்டின் முற்றத்திலே எல்லோரும் பார்க்கும்படியாகத் தொங்கவிட்டிருந்தார்கள்.



கனவல்ல - பாடம்!

மலர்வண்ணன்

பாலுவுக்கு அன்றிரவு ஏனோ தூக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டே யிருந்தான். அவன் மனம் எதை எதையோ நினைத்துத் துடித்துக் கொண்டே யிருந்தது.

'கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி என்று எந்தப் போட்டி வந்தாலும் இந்த முரளியே முதல் பரிசு வாங்கி வருகிறானே, எப்படி ?' என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

'ஆண்டவனுக்கு ஏன்தான் இந்த ஓரவஞ்சனையோ?' என்று பாலுவின் வாய் மெல்ல மெல்ல முணு முணுத்துக் கொண்டது.

'அட, எல்லாப் போட்டிகளிலும்? அவன்தான் பரிசு வாங்க வேண்டுமா ஏதாவது ஒன்றிலாவது எனக்குத் திறமையைத் தந்திருக்கக் கூடாதா ? இந்த ஆண்டவன் ?'

திடீரென்று அந்த அறையைப் புகை சூழ்ந்து கொண்டது. அவன் கண்கள் அகல விரிந்தன. புகை வண்ண வண்ணமாகச் சுழன்றது. சிறிது நேரத்தில் அந்தப் புகைக்கு இடையில் இருந்து ஒரு பூதம் எழுந்தது. பாலு பயந்தே போய்விட்டான்.

''உனக்கு என்ன வேண்டும், சொல், தருகிறேன்'' என்று பூதம் ஏழுரைக் கட்டைக் குரலில் கேட்டது. பாலுவுக்குக் கொஞ்சம் பயம் விட்டுப் போனதும், மெல்லக் கேட்டான்.

''பள்ளிக் கட்டுரைப் போட்டிகளில் நான் முதல் பரிசு வாங்க வேண்டும்.''

''நீ கேட்டபடியே வரம் தந்தேன்'' என்று சொல்லிப் பூதம் மறைந்தது.

மறு நாள் பாலு மகிழ்ச்சியோடு பள்ளிக்குச் சென்றான். கட்டுரைப் போட்டியும், பேச்சுப் போட்டியும் நடந்தன. இரண்டிலுமே பாலுவுக்குத்தான் முதல் பரிசு. பாலுவுக்கு ஒரே மகிழ்ச்சி. பூதத்தை மெச்சிக் கொண்டான். பூதத்தைப் பற்றி யாரிடமாவது சொல்ல வேண்டும் என்று நினைத்து மணியிடமும் கோபியிடமும் சொன்னான். அது அப்படியே பள்ளி முழுதும் பரவிவிட்டது.

''போடா, பூதம் கொடுத்த வரம் தாண்டா அது! பூதம் இல்லேன்னு இவனுக்கு ஏதுடா பரிசு. பூதம் வரம் கொடுத்தால் நீயும் நானும் கூடப் பரிசு வாங்க மாட்டோமா ?''

முல்லைக் கொடிக்கருகே நின்று கொண்டு கோபி இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தான். இதைக் கேட்டதும் பாலுவுக்கு அழுகை அழுகையாக வந்தது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. அன்று முழுவதும் அழுது கொண்டே யிருந்தான். அழுது அழுது அவன் கன்னம் வீங்கி விட்டது. கண்கள் சிவந்து விட்டன.


இரவு மறுபடியும் பூதம் வந்தது. ''ஏன் அழுகிறாய் ?'' என்று பாலுவைக் கேட்டது. பாலு அழுது கொண்டே நடந்ததைச் சொன்னான்.

'' நீ எதற்காக என்னைப் பற்றிச் சொன்னாய்?'' என்று பூதம் பாலுவைக் கேட்டது. அவன் பதில் சொல்ல முடியாமல் திருதிருவென்று விழித்தான்.

பின்னர் பூதமே, ''சரி, நானே ஒரு வழி செய்கிறேன். அவர்கள் எல்லோரும் என்னைப் பற்றி நீ சொன்னவற்றை மறந்துவிடுவார்கள்'' என்றது.

பாலுவின் கண்கள் அகல விரிந்தன. அவன் வாய் மெல்ல, ''முடியுமா?'' என்று கேட்டது. பூதம் சிரித்துக் கொண்டே ''என்னால் எல்லாம் முடியும். நான் உன்னை எல்லோரும் பாராட்டும்படியும் செய்கிறேன், பார்'' என்று சொல்லி விட்டு மறைந்துவிட்டது.





பாலுவுக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவே இல்லை. மறு நாள் பள்ளிக்குச் சென்றதும் அவன் நண்பர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு மிகவும் பாராட்டினார்கள். எல்லோரும், பூதம் பற்றிய செய்தியை மறந்துவிட்டார்கள் என்பதை அறிந்து பாலுவுக்கு ஒரே சந்தோஷம். பூதத்தை மனத்துக்குள் மிகவும் பாராட்டிக் கொண்டான்.

கோபி முதல் நாள் பேசிய பேச்சு அவன் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. ஆனால் கோபி அன்று அவனை மிகவும் மனம்விட்டுப் பாராட்டினான். அவனும் பூதத்தைப் பற்றி மறந்துவிட்டான். பாலுவின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இடைவேளை மணி அடித்த போது, தமிழாசிரியர் அவனை அழைப்பதாகப் பியூன் சொன்னதும் அவருடைய அறைக்குப் போனான்.

தமிழாசிரியர் அவனை மிகவும் பாராட்டினார். ''உன்னுடைய கட்டுரையும் பேச்சும் மிகவும் அருமையாக இருந்தன. நீ என் மாணவன் என்பதில் எனக்குத்தான் பெருமை...'' என்றார்.

பாலுவுக்கு ஒரே குஷி. பின்னர் தமிழாசிரியர் கேட்டார்.

''ஆமாம், நீ எழுதிய, சொன்ன கருத்துக்களை மிகவும் சிரமப்பட்டுச் சேகரித்திருப்பாயே, எப்படிச் சேகரித்தாய்? யாராவது உதவி செய்தார்களா ?''

பாலுவுக்குச் சுருக்கென்றது. ''இல்லை இல்லை... பூ... நூ... நூலாகத்தில்...'' என்றான்.

பாலுவின் தடுமாற்றத்தைக் கண்ட தமிழாசிரியர், ''ஓ... நூலகத்துக்குப் போய்ச் சேகரித்தாயா ? சரி, நீ போ இப்படியே உன் திறமையை மேன்மேலும் வளர்த்துக் கொள்'' என்றார்.

வெளியே வந்த பாலுவுக்குத் தாகமாக இருந்தது. தண்ணீர்ப் பானை வைத்திருந்த முல்லைக் கொடிக்குப் பக்கத்தில் போனான். பாதித் தண்ணீரை மொண்டு குடித்ததும் அவனுக்கு அந்த முல்லைக் கொடியும் கோபியும் நினைவுக்கு வந்துவிட்டன.

''முதல் நாள் கோபி இந்தக் கொடியருகேதானே அப்படிப் பேசினான் ? அந்த நினைவு அவனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. பின்னர் தமிழாசிரியரை நினைத்துக் கொண்டான். 'எப்படிச் சேகரித்தாய்?' என்ற அவர் கேள்வி பாலுவின் நெஞ்சில் முள்ளாகக் குத்தியது. குற்றமுள்ள நெஞ்சம் அல்லவா ?

'இப்படியே உன் திறமையை வளர்த்துக் கொள்' என்றாரே — இப்படியேவா ?

எல்லாரும் மனமாரப் பாராட்டியது அவனுக்கு இப்போது மகிழ்ச்சியைத் தரவில்லை. ஏனென்றால், அது கூடச் செயற்கைதானே ? பூதம் செய்ததுதானே ? உண்மையான பாராட்டுகள் அல்லவே ?

பாலுவுக்குக் கண்ணில் நீர் முட்டிக் கொண்டு நின்றது. தன் நிலையை எண்ணிக் கொண்டான். அவனுக்கு அமைதியே இல்லை. அவன் நினைத்தபடி பரிசு வாங்கிவிட்டான். ஆனால் மகிழ்ச்சிதான் இல்லை.

கோபி சொன்னது உண்மைதானே? பூதம் நினைத்தால் மக்குக் கூடப் பரிசு வாங்க முடியுமே? இதனால் நான்

எப்படி மகிழ முடியும்? நாம் கஷ்டப் பட்டுப் படித்து எழுதிப் பரிசு வாங்கினால் உழைப்புக்குப் பரிசு என்று மகிழலாம். இதனால் என்ன பயன்? பரிசு வாங்கியும் மகிழ்ச்சி இல்லையே?

அன்றிரவும் பாலு படுக்கையில் அழுது கொண்டே படுத்திருந்தான். வழக்கம் போலப் பூதம் வந்தது. பாலு அழுது கொண்டே நடந்ததையும் தான் நினைத்ததையும் சொன்னான்.

பூதம் அவனைப் பார்த்து, "நீ சொன்னது உண்மைதான். பிறர் மறந்துவிட்ட போது உன் மனச்சாட்சி உன்னைச் சுடுகிறது. சரி, வருத்தப் படாதே. இறைவன் ஒவ்வொருவருக்கும் பல வேறுபட்ட திறமைகளைக் கொடுத்திருக்கிறார். அந்தத் திறமைகள் எல்லோரிடமும் இருக்கின்றன. ஒரே திறமை எல்லோரிடமும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. திறமையே இல்லாதவர்களை இறைவன் படைப்பதும் இல்லை. ஆனால் மிகச் சிலரே அந்தத் திறமையை வளர்த்துக் கொள்கிறார்கள். கடும் உழைப்பால் தான் உயர முடியும். அதன் மூலம் இறைவன் தராத திறமையைக்கூடக் கேட்டுப் பெற முடியும். ஆகவே உன் திறமையை உணர்ந்து உழைத்து வெற்றி பெறக் குறுக்கு வழி வேண்டாம். எல்லாம் உன் உழைப்பாக இருக்கட்டும். நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பூதம் மறைந்தது.

ஏதோ சத்தம் கேட்டுத் திடீரென்று திடுக்கிட்டு விழித்த பாலு எழுந்து உட்கார்ந்தான். கண்களைக் கசக்கிக் கொண்டு, தான் கண்டது கனவு என்பதை உணர்ந்தான்.

"கனவல்ல, இது பாடம்" என்று அவன் வாய் முணு முணுத்துக் கொண்டது.

அன்பு மிகுந்த ஆசிரியர் அவர்களுக்கு,

எங்கள் மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்! நீங்கள் அன்புடன் அனுப்பிய புத்தாண்டு வாழ்த்துக்களுக்கு நன்றி!

என்ன, யாரோ புதியவர்கள் அவர்களுக்கு அனுப்பாத புத்தாண்டு வாழ்த்துக்கு நன்றி சொல்கிறார்களே என்று பார்க்கிறீர்களா? இந்த முறை நீங்கள் தெரிந்தோ தெரியாமலோ இரண்டு கோகுலம் அனுப்பி யிருக்கிறீர்கள்!

எங்களுக்கு இரண்டு குழந்தைகள். பையன் ஜயராமன் எட்டாம் வகுப்புப் படிக்கிறான். மகள் சுமதி ஆறும் படிவம் படிக்கிறாள். இருவரும் உங்கள் கோகுலத்தை மிகவும் ரசித்துப் படிக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு கஷ்டம். இருவரும் ஒரே சமயத்தில் படிக்க வேண்டும் என்று சண்டை போடுவதைப் பார்த்தால் சகிக்காது. மாதத்தில் இரு முறை எங்கள் பாடு பெரும்பாடுதான். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமாக அவர்களைத் தாஜா செய்யவேண்டும். ஆனால் பாருங்கள், கிறிஸ்துமஸ் லாக்கு அங்கிள் சாம் போல, எங்களுக்கு நீங்கள் பரிசு அளித்து விட்டீர்கள். குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வருவதற்கு முன்னாலேயே நாங்கள் ஒன்றில் ஜயராம் பெயரும் மற்றொன்றில் சுமதி பெயரும் எழுதி வைத்துவிட்டோம். இன்று அவர்களுடைய சந்தோஷத்தை எப்படி எழுதி உங்களுக்குத் தெரிவிப்பது என்றே தெரியவில்லை.

நாங்கள் கல்கி வந்தவுடன் தொடர் கதைகளைப் படித்துவிட்டு அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்குக் கொடுத்து விடுவோம். அவர்கள் எல்லோரும் படித்துத் திருப்பிக் கொடுத்த பிறகு தான் மற்ற கதைகளைப் படிப்போம்.

ஆனால் எங்கள் பையனோ கோகுலத்தை யாருக்கும் கொடுக்க மாட்டான். கொடுக்கச் சொன்னால், **"ஏன் அவர்களும் வாங்கட்டுமே அறுபது காசு தானே?" என்பான். 'கோகுலம்' சும்மா கதை படிக்க மட்டும் இல்லை. எவ்வளவோ நல்ல விஷயங்கள் வருகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் வாங்கிச் சேர்க்க வேண்டிய பத்திரிகை அது. திரும்பத் திரும்பப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியவை, தெரியுமா?"** எங்களுக்குப் பதில் சொல்லி விடுவான். ஆனால் மற்றவர்களுக்குப் புரிய வேண்டுமே!


எங்கள் காலனிக் குழந்தைகள் எல்லாம் பாவம் கோகுலம் படிக்க வேண்டுமென்ற ஆசையினால் எங்கள் வீட்டுக்கே வந்து உட்கார்ந்து படித்துவிட்டுப் போவார்கள்.

சேலம்,
31-12-75

இப்படிக்கு,
ஸ்ரீமதி சி ஸ்ரீ வெங்கடேசன்

குழந்தைகளே!

உங்களுக்குத் தெரிந்து இப்படி எந்தக் குழந்தையும் கோகுலம் படிக்க முடியாமல் கஷ்டப்படவிடாதீர்கள். எப்படியும் அவர்கள் வீட்டிலும் தவறாமல் கோகுலம் வாங்கும்படிச் செய்யுங்கள். — **ஆசிரியர்**




இரக்கம் தந்த ஏற்றம்

இரா. பானு

சுவர்ணபுரியை ஆண்டு வந்த வீரவர்மர் தன் அரண்மனைத் தோட்டத்தில் உள்ள பரம்பரைச் சொத்தான கற்பக விருட்சத்தை வேண்டி சூர்யப்பிரபன் என்னும் மைந்தனைப் பெற்றார். குழந்தை அஞ்சாநெஞ்சம், ஜீவகாருண்யமும், தயையும் கொண்டு விளங்கிற்று. அவன் தக்க வயது அடைந்ததும் அவன் தந்தை அவனை இளவரசனாக நியமித்தார்.

விரும்புவதை யெல்லாம் அளிக்கும் கற்பகவிருட்சத்தின் பெருமையை மந்திரிகளின் மூலம் அறிந்த சூர்யன், அதன்மூலம் யாவருக்கும் பயனளிக்க விரும்பினான். அதற்குத் தன் தந்தையின் அனுமதியும் பெற்று அம்மரத்தைத் தேடிச் சென்று வணங்கி, ''இவ்வுலகத்தையே பஞ்சத்திலிருந்தும், ஏழைமையிலிருந்தும் விடுவிக்க விரும்பும் என் விருப்பத்தைப் பூர்த்தி செய்த பின் நீ உன் இருப்பிடத்துக்குச் செல்வாயாக'' என வேண்டினான். அம்மரமும் வானத்தில் எழும்பி, பணத்தைத் தூவிவிட்டுத் தேவலோகம் நோக்கிச் சென்றது. அதனால் உலகில் ஏழை என்பவனே இல்லாமல் போனான். சூர்யனின் புகழும் மூவுலகமும் பரவியது.



ஆயினும் சூர்யனிடம் பொறாமை கொண்ட பங்காளிகள் அவனையும், அவன் தந்தையையும் நாட்டைவிட்டுத் துரத்தத் திட்டம் வகுத்தனர். அதனை அறிந்த சூர்யன் தன் தந்தையிடம், ''இந்த அரசுரிமையால் நமக்கென்ன பயன்? மண்ணாசை கொண்ட அவர்களே நாட்டைக் கட்டி ஆளட்டும். நாம் இதைவிட்டு வேறு எங்காவது சென்று புண்ணிய காரியங்களைச் செய்வோம்'' என்றான். அவன் தந்தையும், ''உனக்காகவே நான் காப்பாற்றி வந்த இராஜ்யத்தை ஜீவகாருண்யத்தால் நீயே உதறித் தள்ளினால் எனக்கு அதைப் பற்றி என்ன?'' எனக் கூறி, மனைவி, மைந்தனுடன் நாட்டைத் துறந்து வெளிக் கிளம்பி மலைய பர்வதத்தை அடைந்தார். அங்கே சூர்யனும் தன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்து காலம் கழித்து வந்தான்.

சூர்யன் அம்மலையில் வாழ்ந்து வந்த சித்தர்களின் அரசனான மலயவர்மனின் மைந்தன் சத்ய சீலனுடன் தோழமை பூண்டான். ஒரு சமயம் அம்மலையிலிருந்த கௌரி தேவியை வழிபட வந்த சத்யசீலனின் சகோதரி மலயவதியைக்கண்டு, காதல் கொண்டு தன் பெற்றோர்களின் சம்மதத்துடன் அவளை மணந்து கொண்டான்.

ஒரு நாள் மலையில் பொழுது போக அவன் அங்குமிங்கும் திரிந்து கொண்டிருக்கும் பொழுது ஓர் எலும்புக் குவியலைக் கண்டான். அதைப் பற்றித் தன் மைத்துனனிடம் விசாரித்தான். அதற்கு சத்யசீலன், "வெகு காலத்துக்குமுன் கருடன் தன் தாய்க்கும், நாகங்களின் தாய்க்கும் ஏற்பட்ட விரோதத்தால் வெகுண்டு, அடிக்கடி பாதாள லோகத்துக்குச் சென்று நாகங்களை அழித்து வந்தான். இவ்விதம் தன் குலமே அழிவதைக் கண்ட நாகராஜன் தன் குலத்தைக் காப்பாற்ற எண்ணிக் கருடனை அணுகி, "இவ்விதம் நாகங்களை ஒரேயடியாக அழிப்பதில் உனக்கென்ன லாபம்? உன் உணவுக்காகத் தினம் ஒரு நாகத்தை உன்னிடத்துக்கே அனுப்பி வைக்கிறேன். நீ இங்கு நுழையாமல் இருக்க வேண்டும்" என வேண்டினான். அவ்விதம் அவன் அனுப்பும் பாம்புகளின் எலும்புகளே இங்கு குவிந்து கிடக்கின்றன" என்றான். அதைக் கேட்ட சூர்யனின் உள்ளம் வருத்தத்தால் கரைந்தது.

மறு நாள் தன் பெற்றோர்களுக்குப் பணி செய்யப் புறப்பட்ட சூர்யன் தூரத்தில் யாரோ அழுவதைக் கேட்டான். அது என்ன என்பதை அறிய மேலே ஏறிச் சென்ற சூர்யன், ஒரு பாறையின் மீது அழகான இளைஞன் ஒருவன் நின்று கொண்டிருக்க அவனருகில் "மணிவர்மா, எவ்வளவு கஷ்டப்பட்டு உன்னைப் பெற்றெடுத்தேன். குடும்பத்துக்கு ஒரே குழந்தையாயிற்றே நீ! கருடன் உன்னை உயிருடன் கொத்தித் தின்பதை நான் எங்ஙனம் சகிப்பேன்? உன் முகத்தைக் காணாமல் தள்ளாத வயதில் உன் தந்தையும் மனம்உடைந்து போவாரே. எத்தனையோ பேர் இருக்க நாகராஜன் உன்னைத் தேர்ந்தெடுத்த விதியை என்னவென்று சொல்வது?" என்று கூறிப் புலம்பும் ஒரு கிழவியைக் கண்டான்.



இதைக் கேட்டு உள்ளம் உருகிய சூர்யன், "நிலை இல்லாத இந்த உடலை அளித்துஇந்தநாககுமாரனைக்காப்பாற்றாவிடில் என் பிறப்பால் என்ன பயன்?" என எண்ணி அக்கிழவியிடம் சென்று, "அம்மா! வருந்தாதே. கருடன் பசிக்கு என் உடலை அர்ப்பணித்து நான் உன் மகனைக் காப்பாற்றுகிறேன். உன் மகனை அழைத்துக் கொண்டு நீ வீடு திரும்பு" என்றான். இதைக் கேட்ட கிழவி, "ஒருக்காலும் முடியாது. எங்கள் கஷ்டத்தில் ஆறுதல் அளித்த நீயும் என் மகனே" என்றாள். அவள் மகனும், "இத்தகைய உதார குணமுள்ள உங்களைக் காட்டிலும் என் உயிர் பெரிதல்ல. சாதாரணக் கல்லுக்காக உயர்ந்த இரத்தினத்தை யாராவது இழப்பார்களா?" எனக் கூறி அவனைத் தடுத்தான். பின் தன் தாயை நோக்கி, "அம்மா, நீ இங்கிருந்து திரும்பிப் போ. நான் கீழிறங்கி மலைத் தெய்வத்தை வணங்கிவிட்டுக் கருடன் வருவதற்குள் திரும்பி வருகிறேன்" எனக் கூறிச் சென்றான். கிழவியும் அழுது கொண்டே அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

சூர்யன் மணி வர்மன் வருவதற்குள் கருடன் வந்து விடாதா என்று அங்



குழந்தைகளாகிய உங்களுக்காகவே எழுதுபவர்களுக்கு ஒரு சங்கம் இருக்கிறது. இதற்குக் குழந்தை எழுத்தாளர் சங்கம் என்று பெயர். இதற்கு வயது என்ன தெரியுமா? — இருபத்தைந்து. ஆமாம் — வெள்ளி விழாக் கொண்டாடுகிறது. இம்மாதம் 14ந் தேதி இச்சங்கம். விழாவைத் துவக்கி வைக்கப் பாரதப் பிரதமர் ஸ்ரீமதி

◀ தியாகராஜரின் வாழ்க்கை வரலாற்றை எழுதி முதல் பரிசாகிய தங்கப்பதக்கம் பெற்ற திரு ஆழி வே. இராமசாமி. வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றுக்காக வெள்ளிப் பதக்கம் பெற்ற திரு பூவண்ணன். ▶





கேள்விக்குறி இடம் மாறி இணைத்திருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்கிற பழமொழி தெரியுமல்லவா?

எங்கே, இப்போதாவது 'இது எதற்கு' என்பதை உங்களால் ஊகித்துச் சொல்ல முடிகிறதா பார்க்கலாம். எழுதிப் போடுங்கள் ஒரு கார்டிலே!

கேயே காத்திருந்தான். அவன் எண்ணப்படியே பெரும் புயல் அடிப்பது போல வந்த கருடன் அம்மாவீரனை தன் மூக்கினால் கொத்தி மலையுச்சிக்குத் தூக்கிச் சென்று பிய்த்துத் தின்றது. அப்பொழுது சூர்யனின் தலையிலிருந்து பிய்ந்த மணிமாலை இரத்தத் துளிகளுடன் மலயவதியின் முன் வந்து விழுந்தது. அதைக் கண்ட சூர்யனின் பெற்றோர் ஞானதிருஷ்டியால் நடந்ததை அறிந்து மலயவதியுடன் கருடனிருக்குமிடம் வந்தனர்.

இறை வழிபாட்டை முடித்து விட்டுத் திரும்பி வந்த மணிவர்மன் பாறையில் சிந்தியிருந்த இரத்தத்தைக் கண்டு, ''எனக்காக அம்மகான் தம் உயிரை அர்ப்பணித்து விட்டாரே!'' என மனம் பதறிக் கருடன் இருப்பிடத்தைத் தேடி வந்தான்.

இந்நிலையில் தான் கொத்திக் கிழித்துத் தின்னும்போதும் மலர்ந்த முகத்துடன் விளங்கும் சூர்யனைக் கண்ட கருடன் வியந்து, ''இவர் மகாபுருஷராகத்தான் இருக்க வேண்டும். நாகமாய் இராது'' எனத் தீர்மானித்து, சூர்யனை நோக்கி, ''பெரியோய், தாங்கள் யார் என்பதைத் தெரிவிக்க வேண்டும்'' எனக் கேட்டது.

ஆனால் சூர்யனோ, ''உண்மையில் நான் ஒரு நாகமே'' என்றான்.

இந்த நிலையில் அங்கு வந்து சேர்ந்த மணிவர்மன், ''பட்சியே! அவசரப்பட்டுப் பாவச் செயல் செய்து விடாதே. உனக்காக நியமிக்கப்பட்ட நாகம் நானே. அவரல்ல'' எனக் கூவினான். அதேசமயம் அவ்விடத்தை அடைந்த பெற்றோர்களும், மனைவியும் இறந்து விட்ட சூர்யனின் சின்னாபின்னமாகிக் கிடக்கும் உடலைக் கண்டு கதறினார்கள்.

மணிவர்மன் தன் அஜாக்கிரதைக்காகத் தன்னை நொந்து கொண்டான். சூர்யப்பிரபனின் பெற்றோர் சோகம்தாங்காது உள்ளம் வெடித்துவிடும்படி அழுதார்கள். ஆனால் மலயவதியோ தான் தினமும் வழிபடும் அம்பிகையையே அப்பொழுதும் துதித்தாள். அப்பொழுது தேவி அவளெதிரில் தோன்றி, ''குழந்தாய்! வருந்தாதே!'' எனக் கூறித் தன் கைக்கமண்டலத்தில் உள்ள நீரை சூர்யனின் மீது தெளித்துவிட்டு மறைந்தாள். சூர்யப்பிரபனும் உயிர் பெற்று எழுந்தான். அப்பொழுது கருடன், ''தங்கள் செயல் மூவுலகத்தையும் வியப்பில் ஆழ்த்தி விட்டது. எனக்கு உத்தரவு தாருங்கள். வேண்டிய வரத்தைக் கேளுங்கள்'' எனக் கூறிச் சூர்யப்பிரபனை வணங்கி நின்றது. சூர்யப்பிரபனும், ''தாங்கள் நாகங்களைக் கொன்று தின்பதை இன்று முதல் நிறுத்திவிட வேண்டும். முன்பு நாங்கள் கொன்ற நாகங்களும் உயிர் பெற்றெழ வேண்டும்'' எனக் கேட்க, அவ்வாறே கருடனால் உயிரிழந்த நாகங்கள் உயிர் பெற்றெழுந்தன. கௌரியின் அருளால் நிகழ்ந்ததை அறிந்த தேவர்கள் மலய பர்வதத்துக்கு வந்து சூர்யனை வணங்கி, இமயமலைக்கு அவனை அழைத்துச் சென்றனர். பின் கௌரி தேவியே தம் கையால் அபிஷேகம் செய்ய, அவர்கள் சூர்யப்பிரபனைச் சக்கரவர்த்தியாக அமர்த்தினார்கள்.



இந்திரா காந்தி அவர்கள் வரப் போகிறார்கள். ஆண்டு தோறும் இந்தச் சங்கம் எழுத்தாளர்களுக்குப் போட்டி நடத்தி அவர்களுடைய எழுத்தாற்றலை வளர்க்கிறது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஏவியெம் அறக்கட்டளையினர் தங்கம், வெள்ளிப் பதக்கங்களைப் பரிசாகத் தருகிறார்கள். இந்த ஆண்டு வெற்றி பெற்றவர்கள்தான் இங்குள்ளவர்கள்.

◀ கவிதைக்காக முதல் பரிசு பெற்ற திரு பி. வி. கிரி. இரண்டாம் பரிசு பெற்ற திரு ரா. பொன்ராசன். ▶



'கப்ஸா' மன்னர்கள்

ஓர் ஊரில் நான்கு சோம்பேறிகள் இருந்தார்கள். இளைஞர்களாக இருந்தும் அவர்கள் ஒரு வேலையும் செய்யாமல் திருடியும் மோசடி செய்தும் காலம் கழித்து வந்தார்கள். ஒரு நாள் அவர்கள் ஒரு வழிப் போக்கனைப் பார்த்தார்கள். அவனுடைய உடைகளையும் ஆபரணங்களையும் பார்த்து அவனிடம் உள்ள பணத்தையும் மற்றுமுள்ள பொருட்களையும் மோசடியாக அபகரித்துக் கொள்ள எண்ணிய சோம்பேறிகள் அவனைப் பார்த்து, ''நில்லுங்கள், ஒரு பந்தயம். இந்தப் பந்தயத்தில் கலந்து கொள்ளாவிட்டால் உங்களை அப்பால் போகவிடமாட்டோம்'' என்று தடுத்து நிறுத்தினார்கள்.

''என்ன பந்தயம்?'' என்று கேட்டான் வழிப்போக்கன்.

''உங்களைச் சேர்த்து நாம் ஐந்து பேர் இருக்கிறோம். ஆளுக்கு ஒரு சொந்த அனுபவத்தைச் சொல்ல வேண்டும். அதை யார் நம்பவில்லையோ அவன், அனுபவத்தைச் சொன்னவனுக்கு அடிமையாகிவிட வேண்டும்!''


வியாபாரி 'சரி' என்று பந்தயத்துக்கு உடன்பட்டான். சில பஞ்சாயத்தார்களையும் அழைத்து வைத்துக் கொண்டார்கள்.

முதல் சோம்பேறி தன் அனுபவத்தைச் சொன்னான்: ''நான் என் தாயின் வயிற்றில் இருக்கும்போது அவள் கொய்யாப் பழம் சாப்பிட ஆசைப்பட்டாள். அவளால் மரத்தில் ஏறிப் பறிக்க முடியாது. ஆகவே நான் அவளுக்குத் தெரியாமல் அவள் வயிற்றிலிருந்து வெளியே வந்து மரத்தில் ஏறி ஆயிரக்கணக்கான கொய்யாப் பழங்களைப் பறித்துக் கொண்டு வந்து மலை மாதிரி குவித்துவிட்டுப் பழையபடியும் அவளுக்குத் தெரியாமலே அவள் வயிற்றுக்குள் புகுந்துவிட்டேன்.''

இந்த அனுபவத்தை வழிப் போக்கன் நம்பமாட்டான் என்று நினைத்து அவனை நால்வரும் திரும்பிப் பார்த்தார்கள். ஆனால் வழிப் போக்கனோ தான் நம்பியதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான்.

அப்புறம் இரண்டாவது சோம்பேறி தன் அனுபவத்தைச் சொல்லத்தொடங்கினான்: ''நான் பிறந்து ஒரு வாரமானதும் ஒரு நாள் உலாவப் போனேன். அப்போது பசியாக இருந்ததால், ஒரு புளிய மரத்தில் ஏறிப் புளியம் பழங்களைப் பறித்துச் சாப்பிட்டுப் பசியைத் தீர்த்துக் கொண்டேன். மரத்திலிருந்து கீழே இறங்க என்னால் முடியாது போய்விட்டது. உடனே ஊருக்கு வந்து ஓர் ஏணியைக் கொண்டு போய் மரத்தில் சாத்திக் கீழே இறங்கி வந்தேன்.''





இந்த அனுபவத்தையும் வழிப்போக்கன் நம்பியதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான்.

மூன்றாவது சோம்பேறி தன் அனுபவத்தைக் கூறத் தொடங்கினான். தனக்கு ஒரு வயது நிரம்பிய போது ஒரு நாள் முயல் வேட்டைக்குப் போனதாகவும், அப்போது எதிர்பாராதவிதமாக ஒரு புலியைச் சந்திக்க நேரிட்டதாகவும் சொன்ன அவன், அப்போது ஆபத்திலிருந்து தப்புவதற்குப் புலியின் தொடையைப் பிடித்துக் கிழித்துக் கொன்றுவிட்டதாகவும் சொன்னான்.

வழிப் போக்கனும் அதை நம்பித் தலையை அசைத்தான்!


நான்காவது சோம்பேறி தன் அனுபவத்தைச் சொன்னான்: ''போன வருஷம் ஆற்றுக்கு மீன் பிடிக்கப் போனேன். ஒரு மீன்கூட அகப்படவில்லை. ஆற்றில் குதித்து ஆழமான இடத்தில் மீன்களைத் தேடினேன். மூன்று நாள் தேடிய பிறகு ஒரு பெரிய மீனைப் பார்த்தேன். அப்போது எனக்கு அகோரமான பசி. மீனை அந்த இடத்திலேயே கொன்று அங்கேயே நெருப்பு மூட்டி அதைச் சமைத்துச் சாப்பிட்டு விட்டேன். அப்புறம்தான் ஆற்றின் அடியிலிருந்து மேலே வந்து கரையேறினேன்.''

இந்த அனுபவத்தையும் நம்பித் தலையை அசைத்தான் வழிப்போக்கன். பிறகு அவன் தன் அனுபவத்தைச் சொல்லத் தொடங்கினான். ''என்னுடைய நிலத்தில் மரம் மாதிரி ஒரு பருத்திச் செடி முளைத்து நான்கே நான்கு காய்கள் மட்டும் காய்த்தன. அவை வெடித்த போது ஒவ்வொரு காயிலிருந்தும் ஓர் இளைஞன் வெளியே வந்தான். அவர்களை வேலைக்கு வைத்துக் கொண்டேன். ஒரு நாள் என்னுடைய நான்கு அடிமைகளும் தப்பி ஓடிவிட்டார்கள். அவர்களைப் பல வருஷங்களாகத் தேடி இப்பொழுதுதான் கண்டு பிடித்தேன். அந்த நான்கு இளைஞர்களும் இவர்கள் தான்'' என்று சொல்லி இந்த நான்கு சோம்பேறிகளையும் சுட்டிக் காட்டினான்.

சோம்பேறிகள் இந்த அனுபவத்தை நம்பினால் பந்தயத்தின் பிரகாரம் வழிப் போக்கனைப் பின்தொடர்ந்து போய், அடிமைகளாக வேலை செய்தாகவேண்டும். நம்பா விட்டாலும் அதே பந்தய நிபந்தனையின் பிரகாரம் அடிமைகளாகித்தான் தீர வேண்டும். என்ன செய்வது என்று அவர்கள் விழித்துக்கொண்டிருந்தபோது ''இப்போதே என் பின்னால் வாருங்கள், சீக்கிரம்'' அவசரப்படுத்தினான் வழிப்போக்கன்.

பஞ்சாயத்தார்களும் அதுதான் நியாயம் என்று சொன்னார்கள்.

வழிப்போக்கன் தான் பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுப்பதாய்ச் சொல்லி, ''இந்த நான்கு சோம்பேறிகளும் உடுத்தியிருக்கும் துணிகளைக் கொடுத்தால் இவர்களுக்கு விடுதலை அளிக்கிறேன்'' என்று சொல்லி நால்வரின் துணிகளையும் பறித்துக்கொண்டு போய்விட்டான்?



கொடிய மிருகமாக உருமாறி வாழ்ந்து வந்த சீதளனின் ஆவி மெல்ல மெல்ல அடங்கிக் கொண்டிருந்தது. விஜயனின் வாள் அதன் இதயத்திலே பதிந்து உடல் ரத்தத்தை யெல்லாம் வடித்துக் கொண்டிருந்தது. ஆவேசம் அடங்கிவிட்டது அதற்கு. ஆனால் இன்னும் ஆவி பிரியவில்லை. செயலற்ற நிலை. ஆனால் நினைவற்றுப் போகவில்லை. சீதளன் தன் மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.

''அசட்டு வாலிபனே! வல்லமை மிக்க வாளினால் என்னைக் கொன்றுவிட்டாய். சுவர்ண நதியின் சொக்கத் தங்கத்தைத் தங்களுடைய தாக்கிக் கொள்ளச் சூழ்ச்சி செய்யும் பேராசைக்காரர்கள் உன்னைத் தங்கள் கருவியாக்கிக் கொள்ளப் போகிறார்கள். அவர்களுக்கு நேரப் போகும் துன்பமும் துயரமும் ஏ! வாலிபனே, உன்னையும் தொற்றிக் கொள்ளும். அந்த மாயத் தங்கத்தை யார் தங்களுடையதாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறார்களோ, அவர்களும் அதற்கு உதவியாக இருப்பவர்களும் உருப்படுவதில்லை. அப்படி ஒரு சாபம் இதற்கு உண்டு. அதை அறியாமல் இதை அடையும் முயற்சியில் ஈடுபட்டுத் துன்பத்தை விரும்பி விலை கொடுத்து வாங்கிக் கொண்டு விட்டாயே. விதியின் முடிவை மாற்றியமைக்க யாரால் முடியும்? இந்தத் தங்கத்துக்கு இச்சைப்பட்டுத்தானே நான் என் உடன்பிறந்த சகோதரனைக் கொன்றேன்..'' இதற்கு மேல் சீதளனின் நினைவு ஓடவில்லை. கண் பஞ்சடைந்து, நினைவு தப்பி, மூச்சும் நின்றது.

வெற்றி வீரனாக, வீர விஜயனாக குகையினுள்ளே புகுந்தான் சொக்கத் தங்கத்தைக் கொண்டு வர. மிருகத்தின் ஆட்ட பாட்டமெல்லாம் அடங்கியகாட்சிகளைத் தன் மறைவிடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான் குண்டோதரன். விஜயன் மிருகத்தைக் கொன்று விட்டான் என்பதை அறிந்த அடுத்த கணமே அந்தக் குள்ளனின் உள்ளத்திலே கொடிய எண்ணம் புகுந்தது. பச்சிளங் குழந்தையிலிருந்து பலம் மிக்க வாலிபனாகும் வரையில் விஜயனை வளர்த்திருந்த குண்டோதரனின் நெஞ்சிலே நஞ்சு தோன்றியது. அவன் பட்ட பாடெல்லாம் எதற்காக? யாரோ ஒருத்தி கொண்டு வந்து போட்ட குழந்தையை ஆளாக்கியது எதற்காக? தான் இழந்த மாயத் தங்கத்தை மறுபடி அடைய வேண்டும் என்ற வெறியினால்தானே?

அந்த வெறியே குறியாக வாழ்ந்த குண்டோதரன் இப்போது அந்த மாயத் தங்கம் தன் கைக்கு எட்டும் தூரத்திலே இருக்கும்போது அதை அடையாமல் விடுவானா? தான் வளர்த்த வாலிபனானாலும் விவரம் தெரிந்தவனாகி விட்டானே விஜயன்? தங்கத்தைத் தனக்குக் கொடு என்றால் கொடுத்து விடுவானா? ''பராக்கிரமரிடம் ஒரு தடவை ஏமாந்தது போதாதா? இம்முறை எவ்வித விஷப் பரீட்சையிலும் இறங்கக் கூடாது. விஷத்தையே பயன்படுத்தி அந்தத் தங்கத்தை எனதாக்கிக் கொள்ள வேண்டியதுதான்'' என்ற கொடிய முடிவுக்கு வந்தான் குண்டோதரன். விஜயனைக் கொன்று விடத் திட்டமிட்டு விட்டான் குள்ளன்.

3

தன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டான். கானகத்திலுள்ள பச்சிலைகளின் தன்மையெல்லாம் அறிந்தவனான அவ

னுக்கு உயிர் குடிக்கும் மூலிகைகளைத் தேடி அலைய வேண்டிய அவசியமிருக்கவில்லை. காட்டுச் செடியின் பெரிய இலையொன்றைப் பறித்தான். அதை மடித்துத் தொன்னையாக்கிக் குச்சியினால் இணைத்தான். சில கொடிய மூலிகைகளைக் கசக்கி அவற்றின் சாற்றை அதில் பிழிந்தான். சுவை மிக்க கனிகளைப் பறித்து அதன் சாற்றையும்அதில் வடித்தான். அப்படித் தயாரித்த விஷ பானத்தை ஏந்தியவாறு குகையை நோக்கி ஓடினான் விஜயனை வரவேற்க.

மாயத் தங்கத்துடன் குகையிலிருந்து வெளிவந்த விஜயனை மகிழ்ச்சி பொங்க வரவேற்றான் குள்ளன், கொடிய தன் எண்ணத்தை மறைத்துக் கொண்டு.

''வீரனே! விஜயனே! உன் புகழ் பரவட்டும். யாராலுமே அருகே கூட நெருங்க முடியாத இந்தக் கொடிய மிருகத்தைக் கொன்ற உன் வல்லமைக்கு வாழ்த்துக் கூறுகிறேன். போரிட்டுக் களைத்த நீ, இதோ இந்தப் பானத்தைப் பருகு. புதிய தெம்பும் பலமும் கொடுக்கும் பச்சிலைகளினால் தயாரிக்கப்பட்டது. இந்த அரிய பானம். காட்டு மூலிகைகளையும் கனிகளையும் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தப் பழ ரசத்தை ஏற்றுக் கொள்'' என்று தொன்னையை நீட்டினான் குண்டோதரன்.

வஞ்சனையே அறியாத விஜயன் கொஞ்சமும் சந்தேகமின்றித் தன்னை வளர்த்தவனும், தாத்தாவுக்கு நிகராவனுமான குண்டோதரனிடமிருந்து அந்த விஷ பானத்தை வாங்கிக் கொண்டான். அதைக் குள்ளனின் விருப்பப்படி குடிப்பதற்கும் வாயருகே கொண்டு போய் விட்டான். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது

என்ன அதிசயம்?

விஜயனின் விளையாட்டுத் தோழர்கள் கானகத்துப் பறவைகளும் விலங்குகளும்தான் என்று முன்பே கூறியிருக்கிறோம், நினைவிருக்கிறதில்லையா? விஜயன் விஷ பானத்தைப் பருக முற்படும் போது ஒரு பஞ்ச வர்ணக் கிளி எங்கிருந்தோ பறந்தோடி வந்தது. விஜயனுக்கு அருகில் தழைந்து வளைந்திருந்த ஒரு மரக் கிளையில் உட்கார்ந்து கொண்ட கிளி தன் கொஞ்சும்மொழியில் கூறியது:

''விஜயா, தோழனே! அதைக் குடிக்காதே!'' என்றது. பறவைகளோடு பாசத்தோடு பழகுபவன் விஜயன். அதுவும் கிளிகள் என்றால் அவனுக்குக் கொள்ளை ஆசை. இந்தக் கிளி அத்தனை அழகாக மனிதர்களைப் போலவே



பேசியதைக் கண்ட அவனுக்கு வியப்பான வியப்பாக இருந்தது. கிளி தொடர்ந்து கூறியது: நீ ''பாட்டனைக மதிக்கும் அந்தக் குள்ளனை நம்பாதே. உன்னைக் கொன்று நீ கைப்பற்றியுள்ள தங்கத்தைத் தனதாக்கிக் கொள்ளத் திட்டமிட்டிருக்கிறான் அந்தக் கொடியவன். அதற்காக விஷ மூலிகைகளைக் கொண்டு உனக்குப் பழரசபானம் தயாரித்துக் கொடுத் திருக்கிறான். இதைக் குடித்த மறு நிமிஷமே உனக்கு மரணம் ஏற்படும். அத்தகைய கொடிய விஷங் கலந்த பானம்தான் உன் கையிலிருப்பது'' என்றது கிளி.

எங்கிருந்தோ ஒரு கிளி தோன்றியதை விட, அது மனிதர்களைப் போலப் பேசியதை விட அது கூறிய செய்தி அதிர்ச்சி கொள்ளச் செய்தது விஜயனை. தன் கையிலுள்ள தொன்னையிலே தகதகத்துக் கொண்டிருக்கும் விஷ பானத்தையும் தன் எதிரே உடல் நடுங்க நின்று கொண்டிருக்கும் குண்டோதரனையும் ஒரு நிமிஷம் மாறி மாறிப் பார்த்தான். அவன் வாய் திறந்து எதுவும் கேட்கவில்லை. அந்த மௌனமே, அவன் பார்வையே குள்ளனைக் குதறி எடுத்தது. அடுத்த விநாடி அவன் தன் கையிலிருந்த தொன்னையைத் தூர வீசினான். பாறையில் விழுந்து சிதறிய அதிலிருந்து நெருப்பும் புகையும் பொங்கி எழுந்தன. கல்லிலேயே அது இப்படி ஒரு காட்சியை உண்டாக்குமானால் அது எத்தகைய கொடிய நஞ்சாக இருக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டான் விஜயன்.

கிளி பேசியதிலிருந்து குண்டோதரன் பேச்சிழந்து செயலிழந்து செய்வதறியாது நடுங்கியபடி நின்றிருந்தான்.

அவன் தீவினையே அவனை இப்போது தீர்த்துக் கட்டப் போகிறது. முடிவு நெருங்கி விட்டது என்பதனாலோ என்னவோ அவன் அங்கங்கள் எதுவுமே செயல்பட முடியாதபடி துவண்டன. 'என் பலமெல்லாம் எங்கே போயிற்று?' என்று பரிதாபமாகத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டு நகரக்கூட முடியாத நிலையில் நின்று கொண்டிருந்தான். விஜயனின் வாள் உயர்ந்தது. அதில் சூரிய ஒளி பட்டுப் பளபளத்தது. ஓங்கிய வாளை ஒரே வீச்சில் தாழ்த்தினான். காற்றைக் கிழித்துக் கொண்டு ஜ்வலித்த அந்த வாள் தன்னை உருவாக்கியவன் என்பதற்காகக் கருணை காட்டவில்லை. சொக்கத் தங்கத்துக்கு ஆசைப்பட்டவனை தீர்த்து விட்டது அந்த வாள்.

''கொடியதொரு மிருகத்தை கொன்றாய். ஒரு கொடியவனையும் கொன்றாய். வாழ்க உன் பராக்கிரமம்!'' என்று விஜயனின் தலைக்கு மேலாகச் சுற்றிச் சுற்றிப் பறந்து கத்தியது கிளி. ''தீமைகளை அழிப்பதையே உன் குறிக்கோளாகக் கொள். இரண்டு தீய சக்திகளை அழித்த உன் வீரத்துக்குப் பரிசாக ஒன்றை உனக்குத் தரப் போகிறேன்'' என்று குதூகலத்துடன் கொக்கரித்தது கிளி. கிளியின் மகிழ்ச்சியைக் கண்ட விஜயனின் முகத்திலே முறுவல் தோன்றியது. கரை படிந்த தன் வீர வாளைப் பசும் புல் தரையிலே துடைத்துச் சுத்தம் செய்துகொண்டே ''என்ன பரிசு தரப்போகிறாய் எனக்கு?'' என்று கேட்டான்.

''அற்புதமான பரிசு. ஈடு இணையற்ற ஓர் அழகியை உனக்குத் துணைவியாக்கித் தரப் போகிறேன். இவ்வுலகத்திலேயே அவளுக்கு நிகரான ரூபவதி கிடையாது. அப்படிப்பட்ட ஓர் அழகியை மனைவியாக அடைய உனக்கு விருப்பம் தானே?'' என்று கேட்டது கிளி.

''கரும்பு தின்னக் கூலி கேட்பவரைப் பற்றி நான் கேள்விப்பட்டதில்லை!''

''உன் வீரத்துக்கு ஏற்ற வடிவழகி அவள். உனக்காகவே, உன்னை எதிர் பார்த்தே தவமிருக்கிறாள். அவள் இருக்கும் இடத்துக்கு நான் உன்னை அழைத்துப் போகிறேன். என்னைத் தொடர்ந்து வா'' என்று கூறிப் பறந்தது கிளி. விஜயன் தன் உயிரைக் காத்த அந்தக் கிளியின் வார்த்தைகளிலே நம்பிக்கை வைத்து அதைப் பின்தொடர்ந்தான். பஞ்ச வர்ணக் கிளி பறந்துகொண்டே இருந்தது. பல காடுகளையும் நதிகளையும் குன்றுகளையும் கடந்து போய்க் கொண்டிருந்தது. விஜயன் அதைத் தொடர்ந்து வருவதற்கு வசதியாக மெதுவாகவே பறந்து சென்றது கிளி.

விஜயனை அது எங்கு அழைத்துப் போய்க் கொண்டிருந்தது தெரியுமா? அது குறிப்பிட்ட அந்த அற்புத அழகி யார் தெரியுமா? தீவட்டத்தின் நடுவே பல்லாண்டுகளாக உறங்கிக் கொண்டிருக்கிறாளே, கந்தருவக் கன்னி புவனா, அந்த அழகியிடமே அழைத்துச் சென்று கொண்டிருந்தது அந்தக் கிளி. மூப்போ, பிணியோ தொடவோ தொடரவோ முடியாத தேவர் உலகத்துப் பெண்ணழகியான புவனாவின் துயிலிடம் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது பஞ்சவர்ணக் கிளி. அப்போது...?

விஜயனின் வழியிலே ஓர் ஈட்டி விண்ணிலிருந்து நீட்டிக் கொண்டு நின்றது. கிளியையே பார்த்துக் கொண்டு நடந்து கொண்டிருந்த விஜயன் தன்னைத் தடுத்து நிறுத்தும் அந்த மாய ஈட்டியின் கம்பீரம் கண்டு திடுக்கிட்டுத் திகைத்தான். ஈட்டியை அப்படிக் குறுக்கே நீட்டிய உருவத்தைக் காணத் தலை நிமிர்ந்து நோக்கினான். அங்கே... ஆகாயத்துக்கும் பூமிக்குமாக நெடிதுயர்ந்து நின்றது ஓர் உருவம். கம்பீரமான அதன் தோற்றமே அவன் மனத்தில் ஒரு பக்தியை ஏற்படுத்தியது. முதுமையின் சாயல்கள் அவ்வுருவத்தில் காணப் பட்டாலும் இளமையின் முறுக்குக் குன்றாத உடல். கட்டுமஸ்தான தேகம். அவன் இதுவரை பார்த்திராத உருவம் அது. தன்னுடைய பாட்டனாரான பராக்கிரமரை அவன் இதுவரை சந்தித்ததில்லையே! அதுமட்டுமல்ல. அந்தக் கம்பீர புருஷர் தன் பாட்டனார் என்பதும் அவனுக்குத் தெரியாது. அவருக்கோ?

பராக்கிரமருக்கு நடந்ததெல்லாம் தெரியும். அப்படி அவைகளை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றவராயிற்றே அவர்! தம் மைந்தனின் மைந்தன் தான் இந்த வீர வாலிபன் என்பதை அறிந்திருந்தார் பராக்கிரமர். அதனால்தான் அவன் மேற்கொண்டுள்ள காரியத்தைத் தடுத்து நிறுத்த வந்திருந்தார். மாயத் தங்கம் அதைத் தொட்டவர்களையெல்லாம் எப்படிப் பழி வாங்குகிறது, வஞ்சம் தீர்த்துக் கொள்ளுகிறது என்பதையும் கண்கூடாகக் கண்டு வருபவராயிற்றே, இப்போது அது இவனை எந்த விதமாகப் பழி தீர்த்துக் கொள்ளப் போகிறதோ என்ற கவலையும் கூட அவருக்கிருந்தது. மகனை இழந்தாயிற்று. பேரனையும் இழந்துவிட நேருமோ என்ற பீதி அவர் நெஞ்சைக் கவ்விக் கொண்டிருந்தது.

''இளைஞனே, நீ எங்கே போகிறாய்?'' என்று கேட்டார் பராக்கிரமர் தமது கணீர்க்குரலில்.



''இந்த உலகிலேயே ஈடும் இணையுமற்ற அழகியைச் சந்திப்பதற்காக'' என்றான் உண்மையே பேசும் பயமே அறியாத விஜயன்.

''ஓ! தூங்கும் அழகி, கந்தருவக் கன்னி புவனாவைத் தேடியா போய் கொண்டிருக்கிறாய்? அவளை உறக்கத்தில் ஆழ்த்தியிருப்பது நான்தான். அவள் துயில் நீக்கம் செய்ய நான் யாரையும் அனுமதிக்க மாட்டேன் திரும்பிப் போ'' என்று ஆணையிடும் குரலிலே அதட்டிப் பேசினார் பராக்கிரமர். ஆனால் விதியினால் நடத்திவரப்பட்டுள்ள விஜயனைத் தடுத்து நிறுத்தும் சக்தி தனக்குமே இல்லை என்பதை அவர் அறியவில்லை. தன் சக்தியெல்லாம் குன்றிவிட்ட ரகசியத்தையும் அவர் உணரவில்லை. அதை உணர்த்தும் கருவியாகவே விதி விஜயனை அனுப்பியிருந்தது. தன்னைத் தடுத்து நிறுத்தும் அந்தக் கம்பீர உருவத்தை பார்த்து இளநகை புரிந்தான் விஜயன். இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டு பேசும் சக்தி படைத்த கிளியும் பேசாமல் அமர்ந்திருந்தது ஒரு மரக்கிளையில். (தொடரும்)



தெரியுமா?



2144. இஸ்ரேலியர்களை பாலஸ்தீனியர்கள் எத்தனை ஆண்டுகளுக்கு அடிமைப்படுத்தி இருந்ததாகப் பைபிளில் வருகிறது?

2145. கி. மு. 43ல் பிரிட்டனை அன்னியர்கள் படையெடுத்துத் தம் வசப்படுத்தி ஆண்டார்கள். அந்த அந்நியர்கள் யார்?

2146. எட்டாம் ஹென்றியின் முடிசூட்டு விழா நடந்தது எந்த ஆண்டில்?

2147. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் 1972 டிசம்பரில் காலமானார். அவர் பெயரென்ன?

2148. கிறிஸ்தவர்களின் மாதா கோயில்களில் உலகத்திலேயே மிகப் பெரியது எது, எங்குள்ளது?

2149. கிரீஸ் தேசத்தில் அக்ரபோலிஸ் என்ற மலை மீது அதீனா என்ற பெண் தெய்வத்துக்காகக் கட்டப்பட்ட ஒரு கோயில் பாழடைந்த நிலையில் உள்ளது. இக்கோயிலின் பெயரென்ன?

2150. கோகுலம் 7-12-75 இதழில் சிங்கப்பூர் மலேசியாவுடன் சேர்ந்தது என்று குறிப்பிட்டுள்ளதே! அது சரிதானா?

2151. கிறிஸ்தவர்களின் வேதமான பைபிளின் புதிய கோட்பாட்டை உருவாக்கியவர்களுள் ஒருவர் டாக்டர். அவர் யார்?

2152. ஏசுவின் முதல் சீடர் யார்?

2153. ஃபியூஜியாமா என்ற மலை ஒரு நாட்டில் புனிதமாகக் கருதப்படுகிறது. எந்த நாட்டில்?

2154. டோக்கியோவைக் கணக்கில் கொள்ளாமல் ஆசியாவின் மிகப் பெரிய நகரம் எது — எந்த நாட்டில் உள்ளது?

2155. ஒரு காலத்தில் பார்பரி கடற்கரை நாடுகள் என்று அழைக்கப்பட்டவை எவை?

2156. ஆப்பிரிக்காவில் ஸாம்பஸி என்றொரு நதி. இதில் ஏற்படும் ஒரு நீர்வீழ்ச்சி ஒருமைல் அகலம் இருக்கும். இதன் பெயர் தெரியுமா?

2157. அமெரிக்க நகரங்களில் ஒன்றைக் windy city என்பார்கள். அது எது?

2158. உலகின் மிகப் பழைமையான நாணயம் எது?

2159. கம்யூனிஸத்தின் தந்தையான கார்ல் மார்க்ஸ் 1883ல் இங்கிலாந்தில் தான் இறந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடம் எது தெரியுமா?

2160. தேனீர் இங்கிலாந்துக்குள் புகுந்தது எந்த நூற்றாண்டில்?

2161. உலகில் எத்தனை வகையான காண்டாமிருகங்கள் உள்ளன?

2162. அபு மலைகள் எங்குள்ளன, எதற்குப் புகழ் பெற்றது?

2163. அங்க்லேஷ்வர் என்றதும் நினைவுக்கு வருவது எது?

2164. பாராவ்னி எதற்குப் புகழ் பெற்றது?

2165. டியேகோ கார்சியாவைப் பற்றி என்ன தெரியும்?

2166. லும்பினி எங்குள்ளது, எதை நினைவுபடுத்துகிறது?

தெரியுமே!




2144. நாற்பது ஆண்டுகள். 2145. ரோமானியர்கள். 2146. அவர் முடிசூட்டிக் கொள்ளவே இல்லை. 2147. ஹாரி ட்ரூமன். 2148. ரோம்-வாடிகன் நகரிலுள்ள செயின்ட் பீட்டர் ஆலயம். 2149. பார்த்தெனன் (Parthenan) கோயில். 2150. தவறு சிங்கப்பூர் நீவு தனி ஆளுகைக்கு உட்பட்டது. அதன் நிர்வாகம் தனி. மலேசியா பெடரேஷனுடன் அதற்குத் தொடர்பு கிடையாது. 2151. லூக் (Luke). 2152. செயின்ட் ஆண்ட்ரூ. 2153. ஜப்பானில். 2154. சீனாவில் உள்ள ஷாங்காய். 2155. வட ஆப்பிரிக்க நாடுகளான மொராக்கோ, அல்ஜீரியா, டுனீஷியா, லிபியா ஆகியவை. 2156. விக்டோரியா நீர்வீழ்ச்சி. 2157. சிகாகோ நகரை. 2158. சீனர்களின் நாணயமான 'பூ' (Pu) காலம் கி. மு. 700. 2159. ஹைகேட் கல்லறைப் பகுதியில். 2160. பதினேழாம் நூற்றாண்டில். 2161. ஐந்து வகை. ஆப்பிரிக்காவில் இரு வகை, ஆசியாவில் மூன்று வகை. 2162. ராஜஸ்தானிலுள்ள மலைவாசஸ்தலம். சிற்பச் சிறப்புமிக்க ஜைனர்களின் கோயில்களுக்குப் புகழ் பெற்றது. 2163. சமீபத்தில் இங்கு பெட்ரோல் எண்ணெய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. குஜராத் மாகாணத்திலுள்ளது. 2164. பீஹாரில் உள்ள மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை. 2165. இந்துமகா சமுத்திரத்தில் இந்தியாவிலிருந்து தெற்கே ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள சிறு தீவு. பிரிட்டனுக்குச் சொந்தமானது. அங்கு ராணுவ தளம் அமைக்க அமெரிக்காவுக்குக் குத்தகைக்கு விட்டிருக்கிறது பிரிட்டன். 2166. நேபாளத்தில் உள்ளது. கௌதம புத்தர் பிறந்த இடம் இது.

கோகுலத்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு "கல்கி" அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளீயால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்.

எல்லா விதத்திலும் சிறந்த பல்புகள்

பிலிப்ஸ்



பிலிப்ஸ் பல்புகள்

PHILIPS

பிலிப்ஸ்—லாம்ப் மற்றும் ஒளித்துறையில் முன்னோடிகள்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

REGISTERED No. M 9040

GOKULAM Childrens Fortnig...,

